

தமிழரசு
1-8-1992 ரூ-1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

# இந்த இதழில்...


| | |
|---|---|
| இந்தியக்குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா ... | 2 |
| மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு ... | 4 |
| பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ... | 10 |
| நேரு விளையாட்டரங்கம் ... | 11 |
| மலட்டுத் தன்மை நீங்க ... | 17 |
| காவிரிப் பாசனப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி ... | 21 |
| ஆதிதிராவிடர் நலம் ... | 23 |
| சேலம் அரசு அருங்காட்சியகத்தில் இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம் ... | 24 |
| நூல் நயம் ... | 26 |
| வனவிலங்குப் புகலிடங்கள் ... | 27 |
| கோவை மாவட்ட சமுதாய நலப்பணிகள் ... | 31 |
| செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்: ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... | 33 |
| படமும் செய்தியும் ... | 34 |
| கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... | 36 |
| சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... | 42 |
| ஒலிம்பிக் போட்டி ... | 43 |
| மாணவர் பக்கம் ... | 45 |
| துணுக்குகள் | 46 |
| வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு | 47 |




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

ஆடித் திங்கள் - 17

மலர்:23 இதழ்:3

1-8-1992



# இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா

இந்தியத் திருநாட்டின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 13.7.1992 அன்று நடைபெற்ற இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில், டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், எதிர்க்கட்சிகளின் சார்பில் பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்களும் போட்டியிட்டனர்.

டாக்டர் சர்மா அவர்கள் மொத்த வாக்குகளில் 64.78 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார். பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் அவர்கள் 33.21 சதவிகித வாக்குகளைப் பெற்றார். செல்லாத வாக்குகள் 1.65 சதவிகிதம் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்குகளின் மொத்த மதிப்பு 10,26,188 ஆகும். டாக்டர் சர்மா அவர்கள் பெற்ற வாக்குகளின் மதிப்பு 6,75,864. பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் பெற்ற வாக்குகளின் மதிப்பு 3,46,485 ஆகும். செல்லாத வாக்குகளின் மதிப்பு 17,199.

**வாழ்க்கைக் குறிப்பு**

டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 1918-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் போபாலில் பிறந்தார். அவர் செயிண்ட் ஜான்ஸ் காலேஜ் (ஆக்ரா) அலகாபாத் பல்கலைக் கழகம், லக்னோ பல்கலைக் கழகம், ஃபிட்ஸ் வில்லியம் காலேஜ், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், லிங்கன்ஸ் இன், ஹார்வார்ட் சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

அவர் ஆங்கில இலக்கியத்திலும், இந்தியிலும், சமஸ்கிருதத்திலும், மாநிலத்திலேயே முதலிடத்தைப் பெற்று எம்.ஏ., பட்டங்களைப் பெற்றார். கேம்பிரிட்ஜில் சட்டப்படிப்பில் பி.எச்டி. பட்டம் பெற்றார். லக்னோ பல்கலைக் கழகத்திலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் சட்ட ஆசிரியராகப் பணியாற்றினார்.

அவரது சமூகப்பணிக்காக அவருக்கு லக்னோ பல்கலைக் கழகம் 'சக்ரவர்த்தி' தங்கப்பதக்கத்தைப் பரிசாக வழங்கியது. அவர் ஆந்திரம், பஞ்சாப், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பதவி வகித்தார். அவர் டெல்லிப் பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி பல்கலைக் கழகம், காந்தி கிராமம் ரூரல் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் வேந்தராக (Chancellor) ஆகப் பணியாற்றியுள்ளார்.

இவருக்கு விக்ரம் பல்கலைக் கழகம், போபால் பல்கலைக் கழகம், ஆக்ரா பல்கலைக் கழகம், ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் (திருப்பதி), தேவி அகில்யா விஷ்வ வித்யாலயா (இந்தூர்) ஆகியவை டாக்டர் ஆஃப் லாஸ் (Honoris Causa) பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது. ரூர்கே பல்கலைக் கழகம் 'Doctor of Social Science' என்ற பட்டத்தினையும், மொரீஷியஸ் பல்கலைக் கழகம் 'Doctor of Civil Law' என்ற பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தன.

இவர் சர்வதேச விவகாரங்கள், மொழி, சட்டம், தத்துவம், கல்வி, கிராம வளர்ச்சி, மதங்களைப் பற்றிய ஆய்வு ஆகியவற்றில் தீவிர நாட்டம் கொண்டவர்.

இவருடைய கல்லூரி நாட்களில் ஓட்டப்பந்தயங்கள், படகு ஓட்டுதல், நீச்சல் ஆகியவற்றில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். லக்னோ பல்கலைக் கழகதத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குச் சிறந்த நீச்சல் வீரராக விளங்கினார்.

டாக்டர் சர்மா அவர்கள் 1940-இல் லக்னோவில் தம்முடைய வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். தீவிர சுதந்திரப் போராட்ட வீரரான இவர் விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டும், போபாலில் 'மர்ஜர்' இயக்கத்தில் கலந்து கொண்டும் சிறை சென்றார்.

1952-56-இல் போபால் மாநிலத்தில் முதலமைச சராக இருந்தார். பின்பு மத்தியப் பிரதேச அரசியல் அமைச்சராக விளங்கினார் (1956-67). மத்திய தொலைத் தொடர்பு அமைச்சராக 1974-77-இல் பதவி ஏற்றார்.

இவர் போபால் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1950- 52) மத்தியப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் (1967-68) விளங்கினார். இந்திய தேசிய காங்கிரஸின் பொதுச் செயலாளராக 1968-72-இல் பதவி வகித்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராக 32 ஆண்டுகளும் (1952-84) காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராக 20 ஆண்டுகளும், இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவராக இரண்டாண்டுகளும் (1972-74), போபால் சட்டமன்ற உறுப்பினராகவும் (1952-56) மத்திய பிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் (1956-71) நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1971-77, 1980-84) பதவி வகித்தார்.


டாக்டர் சர்மா அவர்கள் 1987-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப் பேற்றார்.

1980-இல் ஆஸ்லோவில் நடைபெற்ற நாடாளுமன்ற மாநாட்டில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். ரஷ்யாவில் கொண்டாடப் பட்ட 40-ஆம் இந்திய விடுதலை நாள் விழாவில் கலந்து கொள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களை இவர் தலைமை தாங்கி அழைத்துச் சென்றார், இவர் ஆங்கிலத்திலும், இந்தியிலும் எழுதிய புத்தகங்கள் இவரது கூர்ந்த அறிவிற்கும், பழுத்த அனுபவத்திற்கும், சிறந்த ராஜ தந்திரத்திற்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## இந்தியக் குடியரசுத் தலைவர்கள்

**டா**க்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் 9-வது இந்தியக் குடியரசுத் தலைவராக 25.7.92 அன்று பதவியேற்றார். இவருக்கு முன் இப்பதவி வகித்த எட்டுத் தலைவர்கள் வருமாறு:

1. டாக்டர் இராஜேந்திர பிரசாத்
   26.1.1950 - 13.5.1962
2. டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்
   13.5.1962 - 13.5.1967
3. டாக்டர் ஜாகிர் உசைன்
   13.5.1967 - 3.5.1969
4. வி.வி. கிரி
   24.8.1969 - 24.8.1974
5. ஃபக்ருதீன் அலி அகமது
   24.8.1974 - 11.2.1977
6. நீலம் சஞ்சீவ ரெட்டி
   25.7.1977 - 25.7.1982
7. கியானி ஜெயில் சிங்
   25.7.1982 - 25.7.1987
8. ஆர். வெங்கடராமன்
   25.7.1987 - 25.7.1992




## குடியரசுத் தலைவர் மாளிகை

**பு**துடெல்லியில் உள்ள மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகையான 'ராஷ்டிரபதி பவன்' ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது ஆங்கில அரசுப் பிரதிநிதிகள் (Viceroys) தங்குவதற்காக இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டடக் கலைச்சிற்பி சர் எட்வின் லுடியென்ஸ் என்பவரால் கட்டப்பட்டது.

சிறப்புமிக்க இந்த வைஸ்ராய் மாளிகை 17 மில்லியன் பவுண்டு மதிப்பீட்டில் (இன்றைய இந்திய ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 70 கோடி ரூபாய்) கட்டப்பட்டது. இந்த மாளிகையைக் கட்டி முடிக்க 17 ஆண்டுகள் பிடித்தன. முதன்முதலாக இந்தப் பிரமாண்டமான மாளிகையில் குடியேறினார் இர்வின் பிரபு (1931).

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த வைஸ்ராய் மாளிகை அரசினர் இல்லம் என்று அழைக்கப்பட்டு, பின்னர் 1950-இல் இந்தியக் குடியரசாகப் பிரகடனம் படுத்தப்பட்ட பிறகு, இந்த அரசினர் இல்லம்.

'ராஷ்டிரபதி பவன்' என்று பெயரிடப்பட்டு குடியரசுத் தலைவர் மாளிகையாக ஆக்கப்பட்டது.

'ராஷ்டிரபதி பவன்' 4 மாடிகளுடன் 340 அறைகளைத் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய பிரமாண்டமான மாளிகையாகும். இந்தப் பிரமாண்ட மாளிகையின் நிலப்பரப்பு மட்டும் சுமார் 200,000 சதுர அடியாகும்.

**நன்றி 'இந்து'.**



# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திரையுலகம் நடத்திய மாபெரும் பாராட்டு விழா !

**தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:**

திரை உலகின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றாகக் கூட்டி, நேசக்கரம் நீட்டி, பாசமழை பொழிந்து, தென்னகத் திரை உலகமே திரண் டெழுந்து, சிறப்புமிக்க ஒரு விழாவை எனக்காக எடுத்து, என்னைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறீர்கள். எல்லாச் சிறப்பும் பொருந் துகிற வகையில், இந்த விழாவினை எடுக்க முனைந்து, வெற்றி கண்டிருக்கிறீர்கள்.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், இத்தனையும் இணைந்த முத்தமிழ் விழாவாக இவ்விழாவினை ஆக்கியிருக்கிறீர்கள்.

சிறிது நேரத்திற்கு முன், தென்னகத் திரை உலகில், தனது இசையின் மூலம் நிரந்தர இடம் பெற்றுள்ள, திரு எம்.எஸ். விஸ்வநாதன் அவர் களின் இசைக் குழுவினரின் இசை மழையில், நாம் நனைந்து சொக்கிப் போனோம். பிறகு நாடகத் தமிழின் எழுச்சியினைக் கண்டு களித்தோம். நடனத்தின் வனப்பில் மூழ்கிப் போனோம். பல் சுவை நிகழ்ச்சிகளைப் பார்த்துத் திளைத்தோம். அதை அடுத்து, இயற்றமிழை எடுத்துக் காட்டும், பலரின் அருந்தமிழ்ப் பாராட்டுகளை அள்ளிப் பருகினோம்.

இவையெல்லாம் போதாது என்று பூர்ண கும்பமிட்டு, பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து, நினைவுப் பரிசுகளை வழங்கி என்னைப் பாராட்டி, சீராட்டி, அரசு சிம்மாசனத் தில் அமர்த்திப் போற்றியிருக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து இன்றைய நாள்வரை, பலரால் நான் பாராட்டப் பெற்றேன் என்றாலும்கூட, இன்றைக்கு எனக்குக் கிடைத்த பாராட்டு, ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இன்றைய பாராட்டு என் தாய் வீட்டுப் பாராட்டு! என் குடும்பத்தினர் கொடுத்த பாராட்டு!!

இப்படி நான் சொல்லுவதற்குக் காரணம், என்னை ஆளாக்கி, தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தி, ஏறத்தாழ 18 ஆண்டுக் காலம், வாழ்வும், வளமும் அளித்த அரும்பெரும் திரை உலகம், என் தாய் வீடு என்றால், அது பொருத்தம்தானே!

இன்றைக்குத் தன் குலக்கொடி, தனிப்பெரும் கோலோச்சும் தன்மை கண்டு, வியந்து பாராட்டி, உளமார நீங்கள் மகிழ்வதை என்னால் காண முடிகிறது, உணர முடிகிறது. இந்த நன்னாளை, நலம் மிக்க பொன்னாளை, எண்ணி எண்ணி மகிழ்கிறேன். எனக்கு இப்படி ஒரு மாபெரும் பாராட்டு விழாவைத் திரை உலகமே திரண்டு வந்து, அதன் அனைத்து அங்கங்களும் ஒன்றாக இணைந்து, எடுப்பும், சிறப்பும் மிக்க ஒரு விழா வாக, இப்படி நடத்தும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இவ்வாறு என் மீது அன்பைப் பொழிந்து, என்னைப் பெருமைப்படுத்திய, கலை உலகச் சகோதர, சகோதரிகளுக்கு, என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் மிகச் சிறப்பாக, கலை நிகழ்ச்சி களை அமைத்து, நடத்திய கலை விற்பன்னர்கள் அனைவருக்கும், என் நன்றியைக் கூறிக்கொள்

கிறேன். இந்த விழாவில் கலந்து கொண்டு, வாழ்த்துரைகள் வழங்கிய திரைப்பட உலகின் சகோதர சகோதரிகளுக்கு, என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலர்ந்த முகத்தோடு, தன் வீட்டுப்பிள்ளை தரணி ஆள் கின்றதே என்ற பெருமையோடு, இவ்விழாவிற்கு விரும்பி வந்து, நிறைந்த நெஞ்சோடு, என்னை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற உங்கள் ஒவ்வொரு வருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு மாபெரும், மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும், என் உளமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்குகிறேன்.!

நான் திரை உலகில் காலடி எடுத்து வைத்த நிகழ்ச்சி பலருக்குத் தெரியாது. அந்த நினைவை உங்களுடன் இந்தத் தருணத்தில் பகிர்ந்து கொள் வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நான் Bangalore, Bishop Cotton Girls' High School-இல் படித்துக் கொண்டிருந்த பொழுது, கோடை விடுமுறைக்காக, என் தாயா ருடன் ஒரு முறை சென்னை வந்தேன். அப் பொழுது எனது தாயார் 'ஸ்ரீசைலம் மகாத்மியம்' என்ற கன்னடத் திரைப்படத்தில் நடித்துக் கொண் டிருந்தார். அன்று இரவு படப்பிடிப்பிற்காக, நான் என் தாயாருடன் ஸ்டுடியோவிற்குச் சென்றேன்.

அன்றைய தினம் அந்த புராணத் திரைப் படத்தில், ஒரு குழந்தை நட்சத்திரம் பார்வதி போல வேடம் அணிந்து நடிக்கும் காட்சி, பட மாக்கப்படுவதாக இருந்தது. எல்லோரும் படப் பிடிப்பிற்காக இரவு 9 மணி முதலே தயாராக இருந்தனர். ஆனால் இரவு 10 மணி ஆகியும், அந்தக் குழந்தை நட்சத்திரம் வரவில்லை. படத் தயாரிப்பாளரும், இயக்குநரும் பதட்டம் அடைந் தனர். அன்று படப்பிடிப்பு ரத்தானால், ஏற்படக் கூடிய வீண் நஷ்டத்தையும் எண்ணிக் கலங்கினர். குழந்தை நட்சத்திரத்திற்கு, உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும், அவர் படப்பிடிப்பிற்கு வரமுடியாது என்றும் செய்தி வந்தது.

என்ன செய்வது என்று திகைத்து நின்ற அந்தத் தயாரிப்பாளரும், இயக்குநரும், என்னைப் பார்த் தனர். என் தாயாரை அணுகி, அந்தப்பார்வதி வேடத்தில் என்னை நடிக்க அனுமதிக்குமாறு கோரினர். அவர்களது சிரமங்களை உணர்ந்த என் தாயார், அவர்களுக்கு அப்பொழுது உதவும் எண் ணத்துடன், என்னை அன்று நடிக்க அனுமதித் தார்கள். பார்வதி வேடம் அணிந்து, குழந்தை நட்சத்திரமாக அன்று நடித்ததுதான், நான் திரை உலகில் எடுத்து வைத்த முதல் அடி. அப்பொழுது எனக்கு வயது 7. ஒரே ஒரு காட்சியில் மட்டும் நடிப்பதாக இருந்த நான், நன்றாக நடித்ததைக் கண்ட தயாரிப்பாளர் எனக்காக ஒரு பாடல் காட்சியையே புதிதாக அந்தப் படத்தில் அறிமுகப் படுத்தி, என்னையே அதில் நடிக்க வைத்தார்.

அதன் பின்னர், திரைப்படங்களில் நடிக்கும் எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. ஏனெனில், நான் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆகவேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாதவாறு எனக்கு 'Chinnatha Gombe' மற்றும் 'வெண்ணிற ஆடை', ஆகிய திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபின், என் வாழ்க்கைப் பாதையே மாறி விட்டது. அதன்பின், படிப்படியான என்னுடைய வளர்ச்சி, மற்றும் பல்வேறு கால கட்டங்களில், எனது திரை உலக உயர்வுகளைத்தான் நீங்கள் நன்கு அறிவீர்களே!

திரை உலகம், மற்றவர்களைவிட எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்துள்ள மகத்தான நன்மையை, இந்த நல்ல நேரத்தில் நினைவு கூர்வது, எனது தலையாய கடமையாகும். எனது இன்றைய உயர்விற்குக் காரணமான, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, எனக்கு அறி முகம் செய்து வைத்த, இச்சீர்மிகு திரை உலகை, நான் எப்படி மறக்க முடியும்? எனக்கு முதன் முதலாக அறிமுகத்தையும், புகழையும், பொருளை யும், பெருமையையும் ஈட்டித் தந்த, இந்தத் திரை உலகை, நான் என் வாழ்நாளில் எப்போதும் மறக்க மாட்டேன்.



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தமிழ்த் திரையுலகம் மாபெரும் பாராட்டு விழாவை நடத்தியது.

25.7.92 அன்று மாலை, சென்னைப் பல் கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சிறப்பிக்கும் சீர்மிகு விழா தொடங்கியது.

மாண்புமிகு அமைச்சர்கள், தமிழ்த் திரையுலக நட்சத்திரங்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் மண்ட பத்தில் குழுமியிருக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்கப் பட்டார்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபை, பல்வேறு திரைப்படச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை மேடைக்கு அழைத்து வந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும், மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இதையடுத்து பானுப்பிரியாவின் நடனமும், கவுண்டமணி-செந்தில் மற்றும் எஸ்.வி. சேகர், சின்னி ஜெயந்த் ஆகியோர் நடித்த நாட கமும் நடைபெற்றன.

தொடர்ந்து, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச்சபையின் தலைவர் திரு. ஏ. ரமேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரையுல கின் சார்பில் அவர், மாண்புமிகு முதல்வர் அவர் களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பின்னர் திரு. டி.வி.எஸ். ராஜூ, திரு. டி. ராமானுஜம், திரு. ஜி.வி., திரு. எம். சரவணன், திரு. எல். சுரேஷ், திரு. ராதா ரவி, திரு. மோகன் காந்திராமன், திரு. எம். பக்தவச்சலா, திரு. சங்கரன் நாயர் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

திருவாளர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், கே. பாக்கியராஜ், ஏ.எஸ். பிரகாசம், ஸ்ரீதர், கே. பாலாஜி, பிரபு, கார்த்திக், பாரதிராஜா, விஜயகாந்த், பி. வாசு, எம்.என். நம்பியார், முக்தா சீனிவாசன், சத்யராஜ், டாக்டர் கே. ஐக்கையா (முன்னாள் எம்.பி.) ஏ.சி. திருலோக சந்தர், பி. மாதவன், டி. ராமானுஜம், திருமதி எம்.என். ராஜம், திருமதி பண்டரிபாய், திருமதி மனோரமா, ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்னர், சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் செயலர் திரு ராமனாதன் நன்றி நவின்றார்.

- என். இளங்கோ.

திரை உலகில் உள்ள அனைத்துக் கஷ்ட நஷ்டங் களையும், ஏற்ற தாழ்வுகளையும், நான் அனுபவத் தாலேயே அறிந்தவள். இந்தத் திரை உலக வாழ் வில், எனக்குக் கிடைத்த பாடம், படிப்பினை, அனுபவம், அறிவு அனைத்தும், இன்றைக்கு நான் எடுத்திருக்கும் பொறுப்புக்கு, அடிப்படைகளாக வும், அரண்களாகவும் நிற்கின்றன என்றால், அது மிகையாகாது.

அந்தக் காலகட்டத்தில், எனக்கு ஆதரவு நல்கிய அனைத்துப் பெரியோர்களும், என் மனதில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளார்கள். குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்து நான் நடித்ததும், அவர்களின் நிழலாக நான் நின்றதும், என் மனத்திரையில் நீங்கா நினைவுச் சின்னங்களாகும். எனது ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன் றைக்கு என்னைத் திரை உலகில் வழி நடத்திச் சென்றார்.

அதன்பின் அரசியலுக்கும் வா என்று ஆணை யிட்டு, அழைத்துச் சென்றார். இன்றைய எனது இந்த உயர்விற்கு, அன்றே அடித்தளம் அமைத் தார். அவரிடம் அரசியல் பாடம் பயின்ற நான், அவர் சுட்டிக் காட்டிய வழியில், அவரது அடி தொடர்ந்து, இன்றைக்குத் தமிழகத்தை வழி நடத்திச் செல்லுகின்ற, ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ளேன் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

ஏழை எளியோரை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டியதை விரைவில் செய்து கொடுக்க, தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசுதான், எங்கள் அரசு. சமுதாயத்தின் பல்வேறு சாரார் களின் குறை களைந்து, நிறை செய்வதே, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையாகும். இந்தத் தத்துவங்களை உள்ளடக்கிய எங்கள் அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறிய உடனேயே சமுதாயத்தின் ஒவ்வொரு பிரி வினரையும் அழைத்து, நேரடியாக அவர்தம் குறைகளைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகள் எடுத்ததை, நீங்கள் நன்கறிவீர்கள். தொழிலதிபர் களை அழைத்துப் பேசினேன்; தொழிலாளர் குறை கேட்டு அறிந்தேன்; வேளாண் பெருங்குடி மக்களின் வெவ்வேறு கோரிக்கைகளைத் தெரிந்து கொண்டேன். மாணவர், ஆசிரியர் பிரச்சினை யைக் கேட்டறிந்தேன்; பொதுமக்களை வாரந் தோறும் சந்தித்து வருகிறேன். இதேபோல, நான் திரை உலகப் பிரமுகர்களையும் அழைத்துப் பேசினேன். அதைத் தொடர்ந்து, உங்களின் கோரிக்கைகளை ஆராயுமாறு, தலைமைச் செயலாளருக்கும், உள்துறைச் செயலாளருக்கும், ஆணை பிறப்பித்தேன்.

தமிழகத் திரைப் படத்துறையின் வளர்ச்சியில், மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ள எங்கள் அரசு, விரைவில் சென்னை தரமணியில், 'Film City' என்ற திரைப்பட நகரை நிர்மாணிக் கும். அதன் கால்கோல் விழா அண்மையில் நடைபெற்றதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். ஓராண்டுக் காலத்திற்குள், இந்தத் திரைப்பட நகரைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாகி வரும் இந்தத் 'திரைப்பட நகர்', திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைக் கப்படுகிறது. இந்தத் திரைப்பட நகரில், ஒரு திரைப்படம் எடுப்பதற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, குறிப்பாகப் படப்பிடிப்புத் தளங்கள், பல்வேறு திரைப்படங்களுக்கும் பயன்படுத்தக் கூடிய பொது இடங்களான, ரயில்வே நிலையம், விமான நிலையம், பூங்கா, நீச்சல்குளம், அங் காடிகள், காவல் நிலையம், கோயில்கள், ஆல யங்கள், மருத்துவமனை, போன்ற அனைத்தையும் தத்ரூபமாகக் காட்டக்கூடிய அமைப்புகளும், மற்றும் படப்பிடிப்பு அரங்கம், மறு ஒலிப்பதிவு - அதாவது Re-recording செய்யும் அரங்கம், வீடியோ அரங்கம், போன்ற அனைத்து வசதிகளும் கொண்டதாய் விளங்கும். சர்வதேச அளவிற்குத் தரம் வாய்ந்த, தேவையான வசதிகளை இந்தத் திரைப்பட நகரில் தருவதே எங்களது குறிக்கோள் என்பதை, உங்களிடையே தெரிவித்துக் கொள் வதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய திரை உலகத்தின் மாபெரும் பாதிப் பாக, அச்சுறுத்தலாக, கேபிள் டி.வி., வீடியோ இருந்து வருவதை, திரை உலகம் நன்கறியும், இந்தப் பாதிப்பிலிருந்து திரை உலகத்தைப் பாது காக்க, இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழகத்தில்தான், கேபிள் டி.வி., வீடியோ மூலம் திரைப்படம் காட்டுவதை ஒழுங்குபடுத்தச் சட்டம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை, உங்கள் கவனத் திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தொழில்களிலேயே திரைப்படத் தொழில் மிக மிக நுண்ணியது; மக்களை ஈர்க்கும் சாதனங்களில் மகத்தானது; வலிமை மிக்கது. இதில் முத்தமிழ் உண்டு; கண்ணுக்கினிய காட்சி உண்டு; காதுக் கினிய கானம் உண்டு; அறிவுக்கினிய கருத்து உண்டு. திரைப்படம் ஒரு அரிய, சிறந்த கலை. உள்ளதை உள்ளபடி சொல்லுவது சொல்லுவது அறிவியல் - உள்ளதை உணர்ந்தபடி சொல்லுவது கலை. அறிவியல் மூளைக்கு இன்பமூட்டுவது; கலை இதயத்திற்கு இன்பமூட்டுவது. அதனால் தான், கலைக்கு என்றுமே வலிவு அதிகம். திரைப் படக்கலை, எல்லோரையும் எளிதில் சென்றடை வதால், இதில் சொல்லப்பட்ட கருத்து, நீதி, நெறி, படிப்பினை, பலருக்குப் பாடமாக அமைகிறது.

திரைப்படம் ஒன்றினை உருவாக்குவது என் பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை நான் அறிவேன். நடிகர்கள், நடிகைகள், இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, இசை அமைப்பாளர்,



பாடல் ஆசிரியர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதி வாளர், எடிட்டர், போன்ற பல்வேறு கலைஞர் களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், அவர்களது உதவியாளர்கள் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்து, ஒருமுகமாக ஒத்துழைத்தால் தான், ஒரு தயாரிப் பாளர் திரைப்படத்தை முடித்து, வெற்றிகரமாக வெளியிட முடியும். தனிப்பட்ட பலரின் திறமை களை, ஒன்றாக இணைத்து உருவாகும் திரைப் படம், ஒவ்வொருவரின் முத்திரையைத் தன்ன கத்தே கொண்டுதான். வெளி வருகிறது.

எனவே, ஒற்றுமை என்பது, திரைப்படத் துறைக்கு மிக மிக அவசியமானது. திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரை அரங்கு உரிமை யாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர், அனை வரும் ஒரு முகமாகச் செயல்பட வேண்டும். அவர் களுக்குள் விலகல், விரிசல் கூடாது. ஒருவருக்கு ஒருவர் பனிப்போரில் ஈடுபடக் கூடாது. Conflict of interest என்பதை நீக்கி, Commonality of interest என்பதை வளர்த்துக்கொண்டு, செயல்பட வேண்டும். இது இயலாவிட்டால், ஒருவருக் கொருவர், 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற நெறிப்படி, உதவி செய்யாவிட்டாலும், உபத்திரமாவது செய் யாமல் இருக்க வேண்டும்.

திரைப்படத் தொழிலின் வாழ்வுக்கும், வளர்ச் சிக்கும், இது மிக மிக அவசியமான ஒன்றாகும்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவரும், மற்றவர்களும், வெவ்வேறு மட்டங் களில் இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல்களையும், ஆபத்துக்களையும், என்னி டத்தில் பல்வேறு சமயங்களில் விளக்கிக் கூறி இருக்கிறார்கள். எழுத்து வடிவத்திலும், கோரிக் கைகளாகக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், திரைப்படத் தயாரிப்



மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார் (22.7.92)

பாளர்கள் சார்பாக, விநியோகஸ்தர்கள் சார்பாக, திரையரங்கு உரிமையாளர்கள் சார்பாக, திரைப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சார்பாக, ஃபெடரேஷன் மூலமாக, அதுவும் 24 கிராஃப்ட்ஸ் (Crafts) தொடர்பாக, எழுப்பப்பட்ட கோரிக்கைகள், பிரச்சினைகள், குறைபாடுகள், இடர்ப்பாடுகள், எல்லாம் அரசு மட்டத்தில் ஆராயப்பட்டன. என்னுடன் நேரடியாக விவாதிக் கப்பட்டன. நீங்கள் கேட்பதை எல்லாம் கொடுத்து விட வேண்டும் என்ற மனம் எனக்கு இருந்தாலும், வரையறுத்த வருவாய்க்கு ஆட்பட்ட அரசிடம், தற்போது போதிய பணம் இல்லாததால், உங் களின் ஏக்கத்தால் ஏற்பட்ட தாக்கத்தை, என்னால் எவ்வளவு தூரம் ஈடேற்றி வைக்க முடியும் என்று தெரியவில்லை. இருப்பினும், எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்யத் துடிக்கும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு, உங்களை நிச்சயமாக ஏமாற்றாது.

திரைப்படத் தயாரிப்பில், பெரிய முதலீடு செய்து பிரபல நடிகர்களை வைத்து பிரம்மாண்ட மான தயாரிப்புகளைச் செய்யும் பெரும் முதலாளி களும்; சிறு முதலீடு செய்து, நிறையப் படங்களைத் தயாரிக்கும், சிறு சிறு தயாரிப்பாளர்களும் உண்டு. ஏறத்தாழ 95 சதவிகிதத்திற்கு மேல் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் சிறு சிறு பட முதலாளிகளின் பெரு முயற்சிதான் என்பதை, நான் நன்கறிவேன். இவர்களை நம்பி, பல இலட்சக் கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள, இச்சிறு முதலாளிகள் தான், திரைப்படத் தொழிலின் இதயத் துடிப்பாக இயங்கி வருகின்றனர். தொழில் ரீதியாகப் பல கஷ்ட நஷ்டங்களை, நாள்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். படத் தயாரிப்பில் ஏற் படும், அளவுக்கு மீறிய செலவினங்கள், அளவுக்கு மீறிய வட்டி விகிதம் போன்றவற்றால், பொருளா தார மூச்சுத் திணறலில், சிக்கித் தவித்துக் கொண் டிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ, அரசு ஏற் கெனவே ஒரு உதவித் தொகை வழங்கும் திட் டத்தை, செயல்படுத்தி வருவதை நீங்கள் அறி வீர்கள். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் சிறு முதலீட்டுப் படங்கள் ஒவ்வொன்றுக்கும், 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப் பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், இந்த உதவித் தொகையை அரசு, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் என்ற நல்ல செய்தியை, உங்களுக்குச் சொல்லுவதில் உவகை அடை கிறேன். மேலும், இந்த ஆண்டு முதல், 50 படங்களுக்குக் குறையாமல், தகுதியின் அடிப்படை யில், இவ்வுதவித் தொகை வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த உதவித் தொகையும், திரைப்படம் திரையிடப்பட்ட 3 மாதங்களுக்குள் வழங்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என் பதையும், மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட விரும் புகிறேன்.

அரசுக்குச் சொந்தமான இடங்களில், வெளிப் புறக் காட்சிகளைப் படமாக்க Out-door shooting செய்ய, பல்வேறு துறைகளைத் தனித்தனியே அணுகி, அனுமதி செய்ய தற்போதைய முறையை மாற்றி, Single Window System மூலம், அதாவது, ஒரே இடத்தில் அனைத்துத் துறைகளின் அனு மதியைப் பெறும் வகையில், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப் படும்.

திரையரங்கு உரிமையாளர்கள், திரையரங்கு நுழைவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கவேண்டும் என்றும், தற்போதைய சூழ்நிலையில் திரையரங் கைப் பராமரிப்பதற்கு அதிகச் செலவு ஏற்படு கிறது என்றும், ஒரு சில மாநிலங்களில் இருப் பதைப்போல், ஒரு சிறு தொகையைப் பராமரிப்புக் கெனத் திரையரங்குகள் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், நீண்ட நாட்களாகக் கோரி வருகிறீர்கள். உங்களின் கோரிக்கைகளைப் பரி சீலனை செய்து, குளிர்சாதன வசதியுடைய திரை யரங்குகளுக்கு ஒரு டிக்கெட்டிற்கு 25 பைசா வீதமும், பிற திரையரங்குகளுக்கு, ஒரு டிக்கெட் டிற்கு 10 பைசா வீதமும், பராமரிப்புச் செலவுக் கென வசூலித்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று, இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற் கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

திரையரங்குகளில் காட்டப்படும் சிலைடுகளுக் குத் தற்போது விதிக்கப்படும் வரியை, நீக்க வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கை யினை ஏற்று இந்த வரியினை நீக்க அரசு விரை வில் ஆணை பிறப்பிக்கும்.

சென்னை நகரை அழகுபடுத்தும் நன்முயற்சியில் ஒத்துழைத்து, அதே நேரத்தில் விளம்பரங்களை ஒட்ட, தனி இடங்களை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையையும் ஏற்று, திரைப்பட விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, ஒரு சில குறிப்பிட்ட இடங்கள், சென்னை நகரில் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒதுக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழிலாளர் பெருமக்களின் நலன் காக்கும் பொருட்டு, திரைப்படத் தொழிலாளச் சகோதரர்கள், அவர்கள் பணிபுரியும்பொழுது, விபத்தில் சிக்குண்டு இறந்தாலோ, அல்லது காயம் அடைந்தாலோ, அவர்களுக்கு முறையே 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் உதவித் தொகையாக, இனி அரசு வழங்கும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்து போனவர் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும்.**

சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், தொழிலாளர் பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். திரைப்பட நகரத்திற்கான ஆலோசனைக் குழுவிடும், அதாவது, Film City Advisory Committee -யிலும், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க முயற்சிக்கப்படும். இதேபோல், மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும், Regional Labour Advisory Committee-யிலும், இவர்களுக்கு இடம் அளிக்கப்படும், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவை தவிர, விற்பனை வரி, கேளிக்கை வரி போன்றவற்றைக் குறைக்க வேண்டும், வேறு சில சலகைகள் வழங்க வேண்டும், எனக் கேட்டிருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, உங்களுக்கு உதவி செய்ய, அரசிற்கு நிறைய மனம் உண்டு; ஆனால் பணம் தான் இல்லை. உங்களின் கோரிக்கைகள் என் மனதிலே, ஆழமாகப் பதிந்திருக்கின்றன. உரிய நேரத்தில், முடிந்ததை உறுதியாகச் செய்வேன் என்பதை மட்டும், இத்தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

உங்களின் சகோதரி என்ற முறையில் நான் உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'உழைப்பே உயர்வு' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாரக மந்திரம், பொதுவாக, வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும், என்றாலும், திரைப்படத் துறைக்கு அது மிக மிகப் பொருத்தமானதாகும். திரை உலகில் ஒருவர், தனது உழைப்பால் மட்டும்தான் உயர, வளர, புகழ் பெற முடியும். எனவே, 'உண்மை - உழைப்பு - உறுதி - துணிவு - நேர்மை' என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுங்கள், அது உங்களை உயர்த்தும்; நீங்கள் ஈடுபட்டுள்ள தொழிலை வாழவைக்கும். அதில் வெற்றிகள் பலவற்றை உங்களுக்குத் தேடித் தரும்!

## மதுவின் தீமை பற்றி
## அண்ணல் காந்தியடிகள்

**★ அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த் தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.**

**★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக் கேடுதான்.**

பிறகு உயர்வுகள் பல தொடர்ந்து உங்களைத் தானாகவே நாடி வரும்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக, புதிய புதிய தொழில் நுட்பங்களும், புதிய சாதனங்களும் உருவாகி வருகின்றன. இந்த விஞ்ஞான வளர்ச்சியை யாரும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படுவது காலத்தின் கட்டளை. உலக வாழ்க்கையின் இயல்பு. அத்தகைய அறிவியல் மாறுதல்கள் ஏற்படும்பொழுது அவற்றை நாம் வரவேற்பதோடு, அதற்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக் கொண்டு, அவற்றையும் நம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால் தான், வெற்றி காண முடியும்.

தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் பலம் திரைப்படத்திற்கு மட்டுமே உண்டு. செம்மையான கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிந்திட, மக்களிடையே புதுமைக் கருத்துக்களைத் தோற்றுவிக்க, ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட, சினிமாவை விட ஒரு சிறந்த சாதனம் இல்லை என்பதை, என்னால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். எனவே, இன்றைய சினிமாத் துறையில் உள்ளவர்கள் அத்தகையதொரு அரிய சமுதாயப் பணியில், தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதே, எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

அதே நேரத்தில், தனி மனித சுதந்திரத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் காவலர்களாய், திரைப்படத் துறையினர் திகழ வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குறிப்பாக - திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள சகோதர, சகோதரிகள் மீது, மக்கள் வைத்திருக்கும் மகத்தான நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும், நல்லெண்ணத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றி உங்கள் வாழ்க்கையில் உயர்ந்திடுவதோடு, இந்த மாநிலத்தையும், இந்த நாட்டையும் உயர்த்திட, சூளுரையேற்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

சேலம் மாவட்டம்:



# பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா

**மா**ண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மாநில அளவிலான பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா 15.7.92 அன்று சேலம் நகராட்சிக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள் கலந்து கொண்டு, பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேருரையாற்றி, அரசின் நலிந்தோர்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மாவட்டச் சிறுசேமிப்புக் குலுக்கலில் 'ஏஏ' மற்றும் 'ஏபி' வரிசையில் சிறப்புப் பரிசு பெற்ற இரண்டு நபர்களுக்கு மாருதி கார் வழங்கியும், குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நபர்களில் பரிசு பெற்ற நான்கு நபர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கியும் சிறப்பித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் துணை இயக்குநர், திரு. இரா. நடேசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தேசப்பற்றையும், நிர்வாகத் திறமையினையும், அன்னாரின் எளிமையையும், பெருமகனார் கல்விக்கு ஆற்றிய அரும்பணிகளையும் குறிப்பிட்டு, சேலம் 2-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். நடேசன் அவர்களும், சேலம் 1-வது தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ஜெயராமன் அவர்களும், நாமக்கல் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். அன்பழகன் அவர்களும் விரிவாகப் பேசினர்.

விழாவிற்குச் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எம்.பி. ஆறுமுகம், அவர்கள் தலைமையேற்று - பெருந்தலைவர் காமராசர் ஆற்றிய அரும்பணிகள் குறித்துப் பேசினார்.

விழாவில், பெருந்திரளான பொது மக்களும், மாணவ மாணவிகளும், முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்துப் பேசினார்.

விழாவின் முடிவில் காது கேளாத சிறுவன் ஒருவன் மாண்புமிகு அமைச்சரை அணுகி தனக்குக் காது கேட்காத குறையைக் கூறி உதவி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயே தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ.300 வழங்கி, காது காட்கும் கருவி வாங்கிக் கொள்ளப் பணித்தார்.

பின்னர், சிறுசேமிப்புத் துறையின் சார்பில் - தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு 2 மாருதி காரையும் பல்வேறு பரிசுகளையும் சுமார் 8 இலட்சம் மதிப்பில் வழங்கினார்.

குடும்ப நலத்துறையின் சார்பில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குக் குலுக்கல் முறையில் பரிசு கொடுக்கும் திட்டத்தின்கீழ், முதல் பரிசாக 3.75 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப்பதக்கங்களும், இரண்டாவது பரிசாக 3 நபர்களுக்குத் தலா ஒரு தங்கப் பதக்கமும் (3.75 கிராம்) வழங்கினார்.

ஏழை மாணவ மாணவிகள் 40 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்கியதோடு, பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் 9 நபர்களுக்கு இலவசச் சலவைப் பெட்டிகளையும், 7 நபர்களுக்கு இலவச முடிதிருத்தும் கருவிகளையும் வழங்கினார். மேலும் முதியோர் உதவித் தொகை 12 நபர்களுக்கும், இலவச வீட்டு மனைப்பட்டா26 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர், பல்வேறு பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முடிவில், சேலம் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நா. தில்லை கோவிந்தன் நன்றி கூறினார்.

போதையின் நன்கொடை வாதை

மதியை அழிக்கும்
மதுவை ஒழிப்போம்

கொலையினும் கொடியது குடி!

முதலில் மயக்கம் பிறகு மரணம்
இதுதான் மதுவின் வழக்கம்!

சென்னை மாநகரில் உள்ள நேரு விளையாட்டரங்கம், தடகளம் உட்பட எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தும் அளவுக்கு விரிவாக்கப்படுகிறது. 54,000 சதுர மீட்டர் கட்டுமானப் பகுதியோடு அமைகிற இதன் கூரை 28 மீட்டர் உயரம் இருக்கும்; பார்வையாளர் மாடம் 20 அடி உயரத்தில் இருக்கும். இரவு பகலாக நடைபெற்றுவரும் இதற்கான பணியில் 2,000 தொழிலாளர்களும் 150 பொறியாளர்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மற்ற விவரங்களை விளக்கும் கட்டுரை இது:

# சென்னை நேரு விளையாட்டரங்கம்

## பார்சிலோனா போலாகிறது

## 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' ஆகிறது!

உலக நாடுகளெல்லாம் உவப்போடு பங்கேற்கின்ற 25-வது ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகரில் துவங்கியுள்ளன. இந்திய நேரப்படி 24.7.92 வெள்ளிக் கிழமை இரவு 11.30 மணிக்கு அந்தப் போட்டியினை ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜூவான் கார்லோஸ் களிப்போடு துவக்கிவைத்த கண் கொள்ளாக் காட்சியை நாமெல்லாம் தொலைக் காட்சி மூலம் கண்டு மகிழ்ந்தோம்.


பார்சிலோனா நகரின் இதயப் பகுதியில் இருக்கின்ற மிகப் பெரிய 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியத்தில் இந்த ஒலிம்பிக் போட்டி நடக்கிறது.


முதல் நாளன்றே 172 நாடுகளைச் சேர்ந்த 10,000 விளையாட்டு வீரர்களும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பயிற்சியாளர்களும் அதிகாரிகளும் இதில் பங்கேற்றிருக்கின்றனர்.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்டிரோ, சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் கோர்பச்சேவ், தென்னாப்பிரிக்க நாட்டிலுள்ள கறுப்பர் இனக் காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்களெல்லாம் அவ்விழாவிலே கலந்து கொண்டனர்; இவைகளையெல்லாம், உலகு முழுவதிலுமாக 350 கோடி மக்கள் தொலைக்காட்சியில் கண்டு உவந்ததாகக் கணக் கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

பார்சிலோனா நகரில் உள்ள அந்த 'மான்ட் ஜூயிக் ஸ்டேடியம்' போல நம் நாட்டிலும் ஒன்று

**இப்போது ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிற ஸ்டேடியத்தின் படமல்ல இது; எதிர்காலத்தில் நடத்தப்படவிருக்கிற சென்னை ஸ்டேடியத்தின் (மாதிரிப்) படம்!**





அமையாதா!'... என்கிற கற்பனை தமிழ்நாட்டு மக்களாகிய நமது நெஞ்சங்களில்மட்டும் தழைக்கக் கூடாதா என்ன?

இயன்றவரை அந்த இனிய கனவைக் கைகூடச் செய்திடும் மேலான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது நம்முடைய தமிழ்நாடு அரசு!

ஆம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.7.92 அன்று, சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கத்தைப் பார்வையிட்டாரல்லவா? 'மான்ட்ஜூயிக் ஸ்டேடியம்' போல மிக விரைவில் மாபெரும் அளவிலே உருமாற விருக்கிறது இந்த நேரு ஸ்டேடியம்!

**தங்கக் கோப்பை கால்பந்துப் போட்டிகள்**

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் - இந்த விளையாட்டரங்கில், உலகிலுள்ள அனைத்து நாடுகள் அளவில் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகள் சென்னை யில் உள்ள நேரு ஸ்டேடியத்திலேதான் நடைபெற விருக்கின்றன.

அதற்குத் தக்கதாக - உலகில் உள்ள எல்லா நாடுகளும் விளையாடும் தகுதிபெற்றதாகத் தரம் உடையதாக 'நேரு ஸ்டேடியத்தை' உருவாக்கும் முயற்சியை முனைந்து மேற்கொண்டிருக்கிறது நமது தமிழ்நாடு அரசு.

இதற்காக மட்டும் 30 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் துவக்கப்பட்ட இப்பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு பெறக் கூடும்.

நல்லிதயம் படைத்தோரின் நன்கொடைகளின் மூலமே இப்பணி தொடர உள்ளது; எனினும் - குறியீட்டுத் தொகையான இந்த 30 கோடி ரூபாயில், மத்திய அரசு தரும் 2 கோடி ரூபாயும், மாநில அரசின் 5 கோடி ரூபாயும் அடங்கும். இதுவரை - சற்றேறக்குறைய 16 இலட்சம் ரூபாய் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற ஏப்ரல் மாதமே இதுகுறித்த அறிவிப்பொன்றைச் செய்தித்தாள்கள் மூலம் வெளியிட்டார்.

**நன்கொடைக்குச் சலுகை**

நிதிமிகுந்தோர், பொதுமக்கள், அயல்நாடு களில் வாழும் இந்தியர்கள் ஆகியோரிடமிருந்து தான் குறிப்பிட்ட நிதியானது வசூலிக்கப்படுகிறது. இந்நிதிக்கு வருமான வரிச்சட்டம் '80-ஜி' பிரி வின் கீழ், தக்க சலுகை தரப்படுகிறது. கடித எண் டி.ஐ.டி.(இ)/2(34)/92-93 நாள் 15.6.92.

இதற்காகவே - தமிழ்நாடு விளையாட்டு அரங் கங்கள் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) என்னும் புதியதோர் அமைப்பு உருவாக்கப்பட்டு - பதிவும் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே இந்த அமைப்பின் தலைவராவார்.

தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 4.3.92-ஆம் நாள் ஆணையின்படியே இந்தப் புதிய ஏற்பாடு.

எழிலுற மட்டுமல்ல; எல்லா நாட்டு விளை யாட்டு வீரர்களுக்கும் ஏற்றதாகவும் அதற்கென

வரையறுக்கப்பட்டுள்ள பன்னாட்டுக் குறியளவின் படி, நவீன வசதிகளோடு நம் தமிழகத்தில் அமைய விருக்கிறது இந்த விளையாட்டரங்கம்.

உலகிலேயே, ஆறுமாத காலத்தில் கட்டி முடிக்கப்படவிருக்கும் இந்த அதிநவீன விளையாட்டரங்கம் - இந்தியாவில் உள்ள எல்லா விளையாட்டரங்கங்களில் இணையற்றதாக விளங்கும்.

**கட்டுமானப் பணிகள்**

விளையாட்டரங்கக் கட்டுமானப் பணியைப் பொறுத்தமட்டில் - திரு. சி.ஆர். நாராயணராவ் மற்றும் எல் அண்டு டி குழுவினர் (L & T Ltd) ஆகியோர் கட்டடக் கலைஞர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இ.சி.சி. குழுவினர் (ECC Group) கட்டடப் பொறியாளர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

குறித்த காலத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர அவசியத்தால், அதற்கான நிதியாதாரம் குறித்து மக்களிடையே தக்கவாறு பிரச்சாரம் செய்யுமாறு, அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

பலதரப்பட்ட விளையாட்டுகளுக்கும் ஏற்ப, அமைக்கப்பட்டுவரும் இவ்வரங்கத்தின் அமைப்புக்கு எவ்வித ஊறும் விளைவிக்காத வண்ணம், வணிக வளாகம் (Shopping Complex) ஒன்றும் கட்டப்படவிருக்கிறது. எல்லாமே அண்மைக் காலத்தில் ஒரு சர்வதேச விளையாட்டரங்கம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள வரைமுறைப்படி வகையுற நிறுவப்படும்.

**விளையாட்டரங்கின் அமைப்பு**

அனைத்து நாடுகள் போட்டிக்கான அளவுடைய கால்பந்தாட்டத் திடல், 8 பிரிவுகள் உடைய ஓடுபாதை, குண்டெறிதல், உயரம் தாண்டுதல், தட்டெறிதல், சங்கிலியில் பிணைக்கப்பட்ட குண்டு வீசுதல், ஈட்டி எறிதல், வளைவு நெளிவு மட்டுமன்றிச் சேரும் சகதியும், மேடும் பள்ளமும், மணலும் நீரும் போன்ற பலவிதத் தடைகளோடும் கூடிய குதிரைப் பந்தயம் (Steeple Chase) ஆகிய போட்டிகளுக்கான இடவசதி கொண்டதாக இந்த அரங்கம் விளங்கும்.

இவைதவிர, செயற்கைத் தரைப் பரப்பு ஓடுதளமும் இங்கிருக்கும்.

ஒரே நேரத்தில் - இங்கு நடைபெறும் போட்டிகளை 40,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்க முடியும்.

முக்கியமானவர்கள், மிக முக்கியமானவர்கள், சிறப்பு அழைப்பாளர்களுக்காக 500 தனி இருக்கைகள் அமைக்கப்படும்.

செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற அமைப்புகளைச் சேர்ந்த செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் ஆகியோருக்கென்று தனிப்பட்ட 500 இருக்கைகள் இவ்வரங்கில் இருக்கும்.

**மக்களுக்கான வசதிகள்**


இந்த அரங்கத்தின் எந்தப் பகுதியில் அமர்ந்தாலும், எவ்விதத் தடையும் இன்றி மக்கள் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் கண்டுகளிக்க முடியும் அத்தகைய வசதியுடன் பார்வையாளர் இருக்கைப் பகுதி அமைக்கப்படுகிறது.

இரண்டு அடுக்குகள் கொண்டதாகப் பார்வையாளர் மாடம் இருக்கும்.

ஒவ்வோர் அடுக்கிலும் தனித்தனிக் கழிவறைகள், சிறு கடைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகிய யாவும் இருக்கும்.







***30*** **ஆயிரம் பார்வையாளர்களுக்குக் கவர்ச்சி மிக்க கூடைநாற்காலிகள் (Polypropylene bucket Seats) இங்கு போடப்பட்டிருக்கும்.**

**விளையாட்டு வீரர்களுக்கான வசதிகள்**

**இந்த அரங்கில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வருகை தருவோருக்கென்றே பல்வேறு வசதிகள் செய்யப்படவிருக்கின்றன.**

குறிப்பாக - ஒரே நேரத்தில், ***100*** பேர் **அமர்ந்து கலந்துரையாடத் தக்க தனி அரங்கு ஒன்றும் இங்கே நிறுவப்படும்.**

**விளையாட்டு வீரர்களுக்கும், நடுவர்களுக்கும், மருத்துவப் பரிசோதனையாளர்களுக்கும் தனித் தனி அறைகள் கட்டப்படும்; அவைகளிலெல்லாம் தனித்தனிக் கழிப்பறைகள் இருக்கும்.**

விளையாட்டு வீரர்கள், களத்தில் இறங்கு முன்பு தனிப்பயிற்சி பெறத்தக்க அறைகள், தனிப் பெட்டிகள் (Lockers), போதை மருந்து பற்றிய பரிசோதனைக்கெனத் தனி அறைகள் எல்லாம் உருவாக்கப்படும்; அத்தனையும் குளிரூட்டப்பட்டவைகளாக (Airconditioned) இருக்கும்.

விளையாட்டு வீரர்களும், பன்னாட்டுப் பிரதிநிதிகளும் மட்டுமே அரங்கினுள் செல்வதற்காக மிகுந்த பாதுகாப்புடைய சுரங்கப்பாதைகள் (Subway) அமைக்கப்படும்.

**முக்கியமானவர்களுக்காக...**

பல்வேறு தரப்பட்ட முக்கியஸ்தர்களின் வாகனங்கள் செல்லுவதற்காகத் தனிப்பாதைகள், கார் நிறுத்துமிடங்கள், லிஃப்ட்டுகள், ஓய்வெடுக்கும் அறைகள், சிற்றுண்டி உணவகங்க்ள் ஆகியவைகளும் இங்கிருக்கும்.

ஆர்டரின்பேரில் உணவளிக்கத்தக்க, கலந்தாய்வுக் கூடங்களும் உண்டு.

மிகமிக முக்கியமானவர்களின் உடைமைகள் வைப்பதற்கெனத் தனித்தனிப் பாதுகாப்புப் பெட்டிகளும் அவ்வறைகளில் வைக்கப்படும்.

**செய்தியாளர்களுக்காக...**

சென்னையில் அமையவிருக்கும் இந்த விசாலமான விநோத அரங்கில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து, அவை பற்றிய செய்திகளைச் செகம் முழுவதும் பரப்பக்கூடிய செய்தியாளர்களுக்கும் இங்கே பல வசதிகள் செய்து தரப்படும்.

கட்டுப்பாடும் கண்காணிப்பும் உடைய நுழைவு வாயில் வழியாகவே இவர்கள் தமது பகுதிக்குச் செல்ல வேண்டியதாயிருக்கும். இவர்களுக்குத் தனித்தனி மாடங்கள் ஒதுக்கப்படும்.

தத்தம் அலுவலகங்களோடு, உடனுக்குடன் செய்தியாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக ஃபேக்ஸ் (FAX), டெலக்ஸ் (Telex), தொலைபேசி இணைப்புகள் போன்ற செய்தித் தொடர்புச் சாதன வசதிகள் செய்து தரப்படும்.

விளையாட்டரங்கை நோக்கிய, குளிரூட்டப்பட்ட சிற்றுண்டிச் சாலைகளும் அவர்களுக்கு உண்டு. அதைப்போலத் தொலைக்காட்சி வருணனையாளர்க்கென்றும் தனிமேடை உருவாக்கப்படும்.

**உடற்பயிற்சியாளர்கள்**

ஆண்-பெண் உடற்பயிற்சியாளர்கள் *150* பேர் தங்கத் தக்கதாகச் சமையற்கூடம் - உணவுக்கூடத்துடன் ஒரு தனிக் கட்டடம் இங்கு எழுப்பப்படும்.

இவர்களுக்கென - விருந்தினர்களும் தங்குவதற்கேற்ப இருவர் தங்கும் அறைகள் அமையும்; எல்லா வசதிகளும் அதிலிருக்கும்.

உடற்பயிற்சி செய்வதற்கெனத் தனிக்கூடமும் அங்கிருக்கும்.

விளையாட்டுக் குழுவினர் தனிப்படவும், சேர்ந்தும் கலந்துரையாடல் செய்யத்தக்க அரங்குகளும் அக்கட்டடத்தில் அமையும்.

**ஒளி அமைப்பு**

இங்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை உலகம் முழுவதும் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பத்தக்க மின்விளக்குகள் விளையாட்டரங்கமெங்கும் ஒளிவெள்ளம் பாய்ச்சும்.


உவகையூட்டும் ஒளிவட்டங்களைக் குறுக்கும் நெடுக்குமாகச் செலுத்தத்தக்க 'CIE' குறியீட்டு ஒளியமைப்பும் பொருத்தப்படும்.

அவ்வாறு செலுத்தப்படும் ஒளிக்கற்றைகள், பார்வையாளர்களின் கண்களைக் கூசச் செய்யாதிருக்கும்படியூான எல்லாக் கட்டுப்பாடுகளும் 'CIE' மூலமே - அனைத்து நாடுகளிலும் கடைப்பிடிக்கும் முறையில் மேற்கொள்ளப்படும்.

ஆங்காங்கே விளக்குக் கம்பங்களிலும், பார்வையாளர் அரங்கின் மேற்கூறைகளிலும் பொருத்தப்படும் சக்தி வாய்ந்த மின் விளக்குகள் இரவைப் பகலாக்கி இன்புறச் செய்யும்.

வண்ணத் தொலைக்காட்சிகளுக்காக- போட்டிகளுக்காக - போட்டியிடுவோர் பயிற்சிக்காக என மூவகைப்பட்ட மின்னியக்கி 'ஸ்விட்ச்' முறைகையாளப்படும்.

அவசரகால ஒளிப்பாய்ச்சு முறையும் கடைப்பிடிக்கப்படும்.



மின்சாரத்தின் உதவியால் மட்டுமன்றி 'ஜென ரேட்டரா'லும் விளையாட்டுத் திடலை ஒளி மயமாக்குவோர் எப்போதும் தயார் நிலையிலிருப் பார்கள்.

**ஒலிபெருக்கி அமைப்பு முறை**

விசாலமாக இருக்கும் விளையாட்டுத் திடல் முழுவதும் கேட்கத்தக்க ஒலிபெருக்கி வசதி - அவசர கால ஒலி பெருக்கிக்கான தனிப்பிரிவு - போட்டிகள் நடக்கும் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கேட்கத் தக்க ஒலி பெருக்கி ஆகியவை இங்கே இருக்கும்.

அவைகளைத் தவிர - பொது அறிவிப்புகள், சிறப்பு அறிவிப்புகள், வண்டி - வாகன அழைப் புகள் ஆகியவற்றுக்கெனத் தனித்தனி ஒலிபரப்புப் பிரிவுகளும் செயல்படும்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

அவசரகால உதவிக்கென இரண்டுகட்ட வெளி யேறும் வழிகள் இவ்வரங்கில் அமையும்.

ஆடுகளத்தில் இருப்போருக்கு இரண்டு வட்டப் பாதுகாப்பு (Ring Security) எப்போதும் இருக்கும். முதலுதவிக்கும், தீயணைப்புக்கும் என வண்டி வாகனங்கள் வரவும் போகவும் இரண்டு தனி வழிகள் விடப்பட்டிருக்கும்.

விளையாட்டரங்கின் முன்புறத்திலும், கீழ்த் தளத்திலும் வனப்புமிக்க வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

**அரங்க அமைப்பிற்குத் தனிக்குழு**

சென்னை மாநகரில், 1993-இல் நடைபெற விருக்கும் அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியைக் கருத்தில் கொண்டு, அனைத்து நாட்டுத் தகுதிக்கேற்ப (International Standards) நேரு ஸ்டேடியத்தை மேற்கண்டவாறு எல்லா வசதிகளோடும் உருவாக்க 25 பேர் கொண்ட ஓர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில் வெளி யிடப்பட்ட அரசு அறிக்கையில் தரப்பட்டுள்ள அக் குழு பற்றிய விவரம் வருமாறு:

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் - குழுத் தலைவர்.
2. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் - துணைத் தலைவர்.
3. அரசு தலைமைச் செயலாளர் அவர்கள்: உறுப்பினர்.
4. அரசுச் செயலாளர் - நிதித்துறை : உறுப்பினர்.
5. அரசுச் செயலாளர் - உள்ளாட்சித்துறை: உறுப்பினர்.
6. அரசுச் செயலாளர் - பொதுப்பணித்துறை: உறுப்பினர்.
7. அரசுச் செயலாளர் - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை: உறுப்பினர்-செயலாளர்.
8. அரசுச் செயலாளர் - கல்வித் துறை உறுப்பினர்.



9. காவல்துறை இயக்குநர் (DGP) உறுப்பினர்.
10. காவல்துறைத் தலைவர், சட்டம்-ஒழுங்கு (I G of Police) உறுப்பினர்
11. தனி அலுவலர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
12. ஆணையாளர் - சென்னை மாநகராட்சி: உறுப்பினர்.
13. நிர்வாக இயக்குநர் - விளையாட்டு வளர்ச்சிக் கழகம்: உறுப்பினர்.
14. திரு. எம். கோபால கிருஷ்ணன், தலைவர்- இந்தியன் வங்கி: உறுப்பினர்.
15. திரு. பி. சிவந்தி ஆதித்தன் - தலைவர் - இந்திய ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்
16. திரு. எம்.ஏ.எம். இராமசாமி, தொழிலதிபர்: உறுப்பினர்.
17. திரு. ஏ.சி. முத்தையா, தொழிலதிபர்: உறுப்பினர்.
18. திரு. எல்.சி. இராமமூர்த்தி, தொழிலதிபர், தமிழ்நாடு கால்பந்தாட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்.
19. திரு. ஆர். பழனியப்பன், தொழிலதிபர் - தமிழ்நாடு கால்பந்தாட்ட உயர்மட்டக் குழுத் தலைவர்: உறுப்பினர்
20. திரு. சி.ஆர். விசுவநாதன், தலைவர் - தமிழ்நாடு ஒலிம்பிக் அசோஷியேஷன்: உறுப்பினர்.



★ தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும், ஜனநாயக முறையில் நாங்கள் கடைசிவரை போராடுவோம்; அதை அடையும்வரை ஓயமாட்டோம்.

21. திரு. கே. முருகன், இணைச் செயலாளர் - இந்தியன் அசோஷியேஷன்: உறுப்பினர்.
22. திரு. எச். கிருஷ்ணமூர்த்தி, நிர்வாக இயக்குநர் - 'மெட்ராஸ் ரீஃபைனரீஸ்' : உறுப்பினர்.
23. திரு. வேணுசீனிவாசன், சுந்தரம் கிளைட்டன் லிமிடெட் - உறுப்பினர்.
24. திரு. எல். புத்தசிங், மண்டல நிர்வாகி- இந்தியன் டொபாகோ கம்பெனி: உறுப்பினர்.
25. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-600 005: உறுப்பினர்.

- இவர்களே அக்குழுவில் அங்கம் வகிப் போராவர்.

**நகராட்சிச் செயலாளர் பணிகள்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் அவர்களும் இந்தக் குழுவில் உறுப்பினர் செயலாளராக இருந்து செயல்படுவார்.

பொதுமக்கள் இதற்கென அளிக்கும் நிதியை இவரே பெற்று இந்தியன் வங்கியில் இதற்காகத் தனிப்படத் துவக்கப்பட்டுள்ள கணக்கில் சேர்க்க வேண்டிய முக்கியப் பொறுப்பில் இருப்ப வராவார்.

**குழுவின் குறிக்கோள்கள்**

நேரு விளையாட்டரங்கத்தை விரிவாக்க அமைக்கப்பட்டுள்ள குழுவானது, மிகப் பழமை யான இப்போதுள்ள விளையாட்டரங்கக் கட்டடத்தை இடிப்பதை முதற்கட்டப்பணியாக மேற்கொள்ளும்.

அவ்வாறு இந்தப் பணி முடிவுற்றபின், புதிய விளையாட்டரங்கத்தை உருவாக்கும் கட்டுமானப் பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ளும்.

ஜவகர்லால் நேரு, 10-வது தங்கக்கோப்பைக் கான அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட் டியை அடுத்த ஆண்டில் இக்குழுவே முன் நின்று நடத்தும்.

அரசிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், விளையாட்டரங்கம் உருவாக்கத்திற்குத் தேவை யான நிதி திரட்டுவதும் - முறைப்படி அந்நிதியைப் பயன்படுத்தி, குறைவின்றி அரசுக் குறிக்கோளை நிறைவேற்றுவதும் இந்தக் குழுவின் அடிப்படைக் கொள்கையாக இருக்கும்.


பழைய கட்டடங்களை இடித்துப் புதிய அரங் கைப் பொலிவுற நிர்மாணித்த பிறகு - அதை நிர்வகிப்பது, கால்பந்தாட்டப் போட்டி நிகழ்ச்சி களை முன்னின்று முறைப்படி நடத்துவது போன்ற பணிகளையும் இக்குழுவே மேற்கொள்ளும்.

- இவ்வாறு 4.3.92-ஆம் நாளைய அரசு ஆணை தெளிவாகத் தெரிவிக்கிறது. தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்களின் சங்கம் (Tamil Nadu Sports Stadia Society) சார்பில் மேற்கண்ட செய்தி களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு வாரியத்தின் அரசுச் செயலாளர் திரு. ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

- பி.எல். ராஜேந்திரன்.

## சென்னை அரசினர் பொதுமருத்துவமனைக்குக் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில், புற்று நோய்ச் சிகிச்சை அளிப்பதற்காக, ரூ.65 இலட்சம் செலவில் கூடுதல் 'கோபால்ட் தெரபி' கருவி வாங்க ஆணையிட்டுள்ளார்.




இதே மருத்துவமனையில் சில காலமாக செயல்படாதிருக்கும் 'கோபால்ட் தெரபி' மருத் துவப் பிரிவு விரைவில் பழுதுபார்க்கப்பட்டு உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும்.

காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தில் விரைவில் இரண்டாவது 'கோபால்ட் தெரபி' கருவி நிறுவப் படும்.

அதேபோல, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள 'கோபால்ட் டெலி தெரபி' யூனிட், பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தால் ஆண்டு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பாபா அணுசக்தி ஆராய்ச்சித் மையத்திடமிருந்து இந்த யூனிட்டை உபயோகிக்க தடையில்லாச் சான்றிதழ் (No objection certificate) பெற்ற பிறகு, இன்னும் சில நாட்களில் இந்த யூனிட்டும் செயல்படத் தொடங்கும்.





# மலட்டுத் தன்மை நீங்க...

மலட்டுத்தன்மை - உலகின் எல்லாப் பகுதிகளிலும் பருவ வயதை அடைந்த ஆண் - பெண்களைப் பாதிக்கும் பொதுவான தொரு பிரச்சினையாகும். இது - வாழும் நிலப்பகுதிக்கு ஏற்ப வேறுபடக்கூடியது. திருமணமான ஆண் பெண்களில் 8 முதல் 15 சதவீதத்தினர் குழந்தை பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

இதன்படி பார்த்தால் உலகில் 5 முதல் 8 கோடிப் பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் எனலாம். மலட்டுத்தன்மை, குறிப்பிடத்தகுந்த அளவு ஏமாற்றத்தையும் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியின்மையையும் தோற்றுவிக்கிறது.

சர்வதேச மற்றும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களின் முயற்சிகளினால் இன்றைய உலகின் மக்கள்தொகைப் பெருக்கம் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் கருத்தடைச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து, பெரிய குடும்பங்களை அமைப்பது குறைந்துள்ளது. இத்தனைப் பின்னணிகளுக்கு இடையிலும், மலட்டுத்தன்மையுடன் இருப்பது அவ்வளவாக முக்கியத்துவம் பெறவில்லை.

ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெறுவதே இன்றைய நிலையிலும் பெருமைக்குரியதாக இருந்து வருகிறது. இன்னும்கூட மலட்டுத் தன்மையைப் போக்க, தடுக்க, அறிந்து சிகிச்சை பெற மருத்துவ உதவி நாடப்படுகிறது.

திருமணமானவர்களுக்குக் குழந்தை பெறும் தகுதி இல்லையென்றால் அது பின்வரும் அடிப்படைகளால் தோன்றியிருக்கக்கூடும்;

**முதல் நிலை மலட்டுத்தன்மை**

தடையின்றிப் பாலுறவு கொண்டு வந்த போதிலும், திருமணமாகி 2 ஆண்டுகள் ஆன பிறகும் பெண் கருத்தரிக்கா நிலை.

**இரண்டாம் நிலை மலட்டுத்தன்மை**

பெண்ணானவள் முன்பு கருத்தரித்திருந்தபோதிலும், தற்போது கருத்தரிக்க இயலாத நிலை.

**கருத்தரிக்கும் தன்மையில் குறைவு**

சில கணவன் மனைவியரிடம் கருத்தரிப்பு நிகழ இயலாத அளவிற்கு (இருவரிடமும்) கருத்தரிக்கும் தன்மையில் குறைவு ஏற்படுவதுண்டு.

மேலே நாம் பார்த்த பல்வேறு விதமான மலட்டுத்தன்மைகளும் பிறவிக் குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது இடையில் பீடிக்கப்பட்டதாலோ நேரிடலாம். பிறவிக் காரணம் ஆண் அல்லது பெண்ணின் இனப்பெருக்க மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் பிறவிக் குறைபாட்டை அடிப்படையாகக் கொண்டது. கருவகங்கள் (Ovaries) வேலை செய்யாமையால் கருவுறுதல் நிகழாமை, போன்றவைகளை இதற்கு

எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இத்தகைய காரணங்கள் முதல்நிலை மலட்டுத்தன்மையின் விளைவுகளாகும்.

**ஆண்களும் காரணமாகலாம்**

இதே போல ஆண்களிடமும் பிறவிக் கோளாறுகள் உண்டு. எடுத்துக்காட்டாக - ஆணின் இனப் பெருக்க உறுப்பான விந்தகங்கள் (Testis) அடி வயிற்றுப் பகுதியில் புதைந்திருந்து, சிறுவனாக இருக்கும் பருவத்தில் வெளியே தொங்கும் விந்தக உறைக்கு இடம் பெயர்ந்து வருவது வழக்கம்.

ஆனால் சில சமயங்களில் இது நடைபெறுவதில்லை; விந்தகம் முதிர்ச்சியடையாமல் விந்து உற்பத்தி செய்வதில்லை.

இடையில் பீடிக்கப்பட்ட காரணங்களை எடுத்துக்கொண்டால், பெண்களிடம் இரண்டு முக்கியமான ஹார்மோன்கள் உற்பத்தியில் பற்றாக்குறை இருக்கலாம். Follicle Stimulating Hormone (FSH), Luteinising Hormone (LH) என்பன அவை. இவை பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் கருத்தரிப்பே நடைபெறாது அல்லது எப்போதாவது ஒருமுறை மட்டுமே நடைபெறும். இப்படிப்பட்ட நேரங்களில் ஹார்மோன் ஊசிகள் அல்லது விசேட மருந்துகள் எடுப்பது, பெரும்பாலும் மாதவிலக்குச் சுழற்சியைச் சரிப்படுத்தி, கருவுறுதலுக்கு வழிவகுக்கக்கூடும்.

பெண்களிடையே மலட்டுத் தன்மை ஏற்படுவதற்குத் தொற்றுகள் ஏற்படுவது மிகச் சாதாரணமான காரணங்களில் ஒன்றாகும். தொற்றுகள் ஏற்படுவதினால் கருவகங்களிலும், கருக்குழாயிலும் சுவர்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கருக்குழாயின் வழியே கருவானது வெளியேறாதபடி தடுத்துவிடும். கருக்குழாயில் தொற்று ஏற்பட்டுப் பாதிப்பிற்குள்ளானால் அடைப்பு ஏற்படும். கருச் சிதைவு மற்றும் மகப்பேறு சமயத்தில் இப்படிப்பட்ட தொற்றுகள் ஏற்பட சாத்தியம் உண்டு. இதனால் கருப்பை மற்றும் கருக்குழாய்கள் தொற்றுவதுண்டு சேதமடைந்துவிடுவதுண்டு. குறிப்பாக - தவறான முறைகளில் கருச் சிதைவு செய்யப்பட்டால் அல்லது மகப்பேறு நிகழ்ந்தால் இப்படித் தொற்று ஏற்படுகிறது.

**ஆய்வின் முடிவுகள்**

பிறப்பு உறுப்பு மண்டலத்தில் ஏற்பட்ட தொற்று மலட்டுத்தன்மையை உண்டாக்குவதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்று 25 நாடுகளில் உலகச் சுகாதார நிறுவனம் செய்த பெரிய ஆய்வு ஒன்று புலப்படுத்தியுள்ளது. முன்னேறிய நாடுகளில் உள்ள மூன்றில் ஒரு பங்குப் பெண்கள் மலட்டுத்தன்மை உடையவர்களாக இருப்பதாகத் தெரிகிறது.

இவர்களுக்கு அடைபட்ட கருக்குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு தொற்றுகள் இடுப்புப் பகுதியிலுள்ள உறுப்புகளில் இருந்ததற்கான சான்றுகள் காணப்பட்டன. ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதே அளவு எண்ணிக்கை காணப்பட்டுள்ளது. ஆனால் ஆப்பிரிக்க நாடுகளில் கிட்டத்தட்ட இருமடங்கு (63 சதவீதம்) பெண்களுக்கு மேற்கண்ட வகை தொற்றுகள் ஏற்பட்டுள்ளன. உண்மையில் 40 சதவீத ஆப்பிரிக்கப் பெண்களுக்குக் கருக்குழாய் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் இதற்கு முன்பு கருவுற்றவர்களே.

கொனோரியா என்ற பால்வினை நோய்க்கும் கருக்குழாய் அடைப்பு மலட்டுத்தனத்திற்கும் தொடர்பு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உண்டான

**குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் தமிழ்நாடு சாதனை!**

**தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மேலும் குறைக்கப்பட்டுள்ளது. 1989-இல் 1000-க்கு 23.1 என்ற விகிதத்தில் இருந்த பிறப்பு விகிதம் தற்சமயம் 22.1 சதவிதிதமாகக் குறைந்துள்ளது. 1981-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (1981-இல் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 28 சதவிகிதம்). குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தியதன் விளைவாகவே இந்தச் சாதனையை அடைய முடிந்தது.**

**தமிழ்நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் மக்கட்தொகைப் பெருக்கம் குறைவாக உள்ளது. தமிழ்நாட்டில் மக்கட்தொகை வளர்ச்சி விகிதம் 1.49 சதவிகிதம்.**

**குழந்தை பிறப்பைப் போலவே குழந்தைகள் இறப்பு விகிதமும் கணிசமாகக் குறைந்துள்ளது. 1989-இல் ஆயிரத்துக்கு 8.6 என்று இருந்தது, 1991-இல் 1000-க்கு 8 ஆகக் குறைந்திருக்கிறது. இது தமிழகத்தில் தற்போது சுகாதார நலம் நல்ல முறையில் பராமரிக்கப்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.**

**மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள கிராமச் சுகாதார உதவியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஏறத்தாழ 5,000 பேர் ஒதுக்கப்பட்டு, அவர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. சுகாதார உதவியாளர்கள் நல்ல முறையில் பிரச்சாரம் செய்வதை ஊக்குவிக்க ஒரு சவரன் தங்கம் பரிசளிக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.**



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகுக் குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

கொள்ளை நோய்களால் இப்படிப் பட்ட ஒரு நிலை ஏற்பட்டதுண்டு. இது ஆண்டிபயாடிக்கு மருந்துகளுக்கு எதிர்ப்பை அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட தொற்று பெரும்பாலும் நோயறிகுறி அற்றதாகவே உள்ளது. உடனுக்குடன் மாறுபடுகிற நிலையற்ற நோயறிகுறிகளையே இது உண்டுபண்ணுகிறது.

**பால்வினைத் தொற்று நோய்**

அண்மையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள Chlamydia எனப்படும் பாக்டீரியா கிருமி மலட்டுத் தன்மையை விளைவிப்பதில் கொனோரியாவைவிட அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கொனோரியாவைப் போலவே இந்த Chlamydia-வும் பால்வினை (தொற்று) நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று நோய்தான். ஆனால் இந்தக் கிருமியால் ஏற்பட்ட தொற்று ஆணிடமும் சரி பெண்ணிடமும் சரி, எந்த அறிகுறியையும் உண்டுபண்ணுவதில்லை. இப்படிப்பட்ட தொற்றுகள் ஆண்டிபயாடிக்குகளைக் கொண்டு சிறப்பாகக் குணப்படுத்தப்பட முடியும். ஆனால், சிகிச்சையில் பெற்ற வெற்றி, மறுபடியும் தொற்று ஏற்படுவதினின்று பாதுகாப்பை அளித்துவிடாது.

காசநோய் கருப்பையின் சுவர்ப் பகுதியைத் தாக்கி, கருவுற்ற அண்டவணுவைக் கருப்பையில் ஒட்டாதபடி தடுக்கவும், கருக்குழாய்களில் அடைப்பை உண்டாக்கவும் கூடும். பெண்களிடையே ஏற்பட்டுள்ள மலட்டுத்தன்மையில் சுமார் 5 சதவீதம் வரை இப்படிப்பட்ட கோளாறால் விளைவது எனப்படுகிறது.

வேறு சில மலட்டுத்தன்மைக் கோளாறுகளில் உடலுறவு இயல்பான விதத்தில் நடைபெற்றிராது. எனவே புணர்வாயில் விந்து பீய்ச்சப்பட்டிருக்காது. இது கணவன் மனைவி இருவரது அறியாமையினாலும் விளைந்திருக்கலாம். அல்லது பெண்களுக்கு உடலுறவைப் பற்றிய உளவியல் சார்ந்த பயங்கள் நேரிட்டிருக்கலாம்.

இடையில் உண்டான மலட்டுத் தன்மைகளில், விந்தகங்களில் புட்டாலம்மை (பொன்னுக்கு வீங்கி) வைரஸ் (Mumps Virus) தொற்று ஏற்படுவது உண்டு. காசநோயும் சிபிலிஸ் நோயும் கூட விந்தகங்களைத் தாக்கக்கூடும். இதனால் விந்தகங்களிலிருந்து வரும் நாளத்தில் விந்து கடந்துசெல்லாதபடி அடைப்பு ஏற்படும்.

வெளியே தொங்கும் விந்தக உறைக்குக் கீழிறங்கி வராத விந்தங்களைச் சரியாக்கச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சை சரியான முறையில் செய்யப்படாவிட்டால் அல்லது அரிதாக ஒரு சில கேசுகளில் ஹெர்னியா எனப்படும் அண்டவாதத்தை (Inguinal herina) சரிப்படுத்தும் போதும் விந்தகங்களுக்குச் செல்லும் இரத்த ஓட்ட வழி சேதமடைந்து, விந்தகங்கள் பழுதாகி சரிவர இயங்காமல் போய்விடும்.

**வெப்பத்தால் விளையும் கேடு**

இது விந்தகங்களைச் சுற்றிலும் இரத்தம் பாய்வதன் அளவைப் பெருக்கி அதன் வெப்பநிலையை உயர்த்திவிடும். விந்தகங்களின் வெப்பநிலை உயர்ந்தால் விந்து உற்பத்தி பெருமளவு குறைந்துவிடும் என்பது நன்கு அறியப்பட்டதாகும்.

இறுக்கமான உள்ளாடைகளை அணிவதால் ஆண் மலடு உண்டாகிறது என்று கூறப்படுவதும் உண்மையே. இந்தச் சுருண்ட சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். சிரை நாளங்களை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

எனினும் இது விந்து உற்பத்தியில் முன்னேற்றத்தை உண்டு பண்ணுமா என்பதும், இதனால் பெண் கருவுற வாய்ப்பு உண்டா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

**குடியாலும் கேடுவரும்**

குடிவெறிக்கு ஆளானவர்கள் லைபிடோ ¬Libido) குறைவால் மலட்டுத்தன்மை அடைகின்றனர். சில ஆண்டிபயாடிக்குகள் ¬Antibiotics) மற்றும் ஆண்டி டெப்ரசண்ட்ஸ் ¬Anti depressants) உட்பட சிற்சில மருந்துகளும் விந்து உற்பத்தியைக் குறைக்கும் என்று அறியப்படுகிறது.

பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மையின் காரணங்களைப் பற்றி அறிந்துள்ளதைவிட ஆண்களுக்கு ஏற்படும் மலட்டுத்தன்மையின் காரணங்களைப் பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. ஆண்களுக்கு மலட்டுத்தன்மை உண்டாக்கும் இக் காரணங்களில், சிலவற்றையே மருத்

# சென்னையில் பழைய தெரு விளக்குகள் புத்தொளி பெறுகின்றன

சென்னை மாநகராட்சி காமராசர் சாலை, இராஜாஜி சாலை, சாந்தோம் நெடுஞ்சாலை, கிரீன்வேஸ் சாலை, சர்தார் படேல் சாலை, அண்ணா சாலை ஆகியவற்றில் பழைய விளக்குகளுக்குப் பதிலாக, 1,500 புதிய சோடியம் ஆவி விளக்குகளை ரூ.60 இலட்சம் செலவில் அமைத்து வருகிறது. அகற்றப்படும் பழைய விளக்குகள் சுத்தம் செய்யப்பட்டும் பழுது பார்க்கப்பட்டும், பேருந்து செல்லும் சாலைகளில் குழல் விளக்குகளுக்குப் பதிலாகப் பொருத்தப்படும். இந்த ஆண்டிற்குள் எல்லாப் பேருந்துத் தடங்களிலும் சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

வட சென்னையில் ஜி.ஏ. சாலை, கல்லறைச் சாலை, புதிய ஆவடிச் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம் தோட்டச் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கல்லூரிச் சாலை, சூரியநாராயணா சாலை மற்றும் தென் சென்னையில் இராம கிருஷ்ணா மடம் சாலை, டி.டி.கே. சாலை, காந்தி மண்டபம் சாலை, பெசண்ட் நகர், 3-வது அவின்யூ, அசோக் நகர் 10-வது அவின்யூ, கவுடியா மடம் சாலை இவற்றில் ரூ.200 இலட்சம் செலவில் சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட உள்ளன.

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட கொடுங்கையூர், கொளத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம், விருகம்பாக்கம், வேளச்சேரி, தரமணி, திருவான்மியூர் போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளில் 7,000 குழல் விளக்குகள் ரூ.560 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளன. இவை யாவும் மாநகராட்சியின் தரத்திற்கேற்ப புதைமின் கம்பிகளுடன் அமைக்கப்படும்.

கிட்டத்தட்ட 300 கி.மீ. நீளத்திற்கு மாநகராட்சி பல்வேறு பகுதிகளிலும் உள்ள பழைய பழுதடைந்த புதைமின் கம்பிகள் ரூ.200 இலட்சம் செலவில் இந்த ஆண்டு மாற்றியமைக்கப்படும்.

தெரு விளக்குகள் பழுது பார்ப்பதைத் துரிதமாகச் செய்ய ஏற்கெனவே உள்ள 22 எந்திர ஏணிகளுடன் புதிதாக 5 எந்திர ஏணிகள் ரூ.30 இலட்சம் செலவில் வாங்கிச் சேர்க்கப்படும். இரண்டு எந்திர ஏணிகள், 6 பணியாளர்கள் ஒரு இளம் பொறியாளரைக் கொண்ட தனிக் குழுக்கள் பழுது பார்த்தலை விரைவாகச் செய்திட அமைக்கப்பட உள்ளது. பழுது என்ன என்பதைக் கண்டு பிடிப்பதில் காலத்தை வீணாக்காமல், புதிய விளக்குத் தொகுதியை மாற்றி அமைத்துத் தெரு விளக்குகளை உடனடியாகப் பழுது பார்க்கும் முறை செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த ஆண்டு சென்னை மாநகராட்சி ரூ.1.160 இலட்சம், தெரு விளக்குகளுக்காக நிதி ஒதுக்கியுள்ளது.

---

துவச் சிசிச்சையின் மூலம் குணப் படுத்த முடியும்.

இதனால் தெரியவருவது என்னவெனில், திருமணமானவர்களிடையே உண்டாகும் மலட்டுத்தன்மையில் குறைந்தது 40 சதவீதத்திற்காவது ஆண்கள் பொறுப்பு உடையவர்கள் என்பதாகும்.

ஏராளமான திருமணமான ஆண்-பெண்கள் ஒரு கோளாறும் உடையவர்களல்ல என்று பரிசோதனைகளின் வாயிலாக அறியப்பட்ட போதிலும், குழந்தை பெறாதவர்களாகவே இருக்கின்றனர். கரு வெளியேறுதல், சினைப்படுதல் கருப்பையில் வளர்தல் போன்ற விஷயங்களில் அண்மைக்கால ஆய்வுகள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகளின் வாயிலாகப் பல தம்பதிகளுக்கு வெற்றிகரமாகச் சிகிச்சை அளித்து வருகின்றபோதிலும், பின்னுங்கூட பதிலளிக்கக்கூடாத கேள்விகள் பல உண்டு.

சோதனைக் குழாய்க் குழந்தை ¬Vitro fertilization) முறை கருக் குழாயில் அடைப்பு ஏற்பட்ட பெண்களுக்கே பெருமளவில் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், மலட்டுத்தன்மையைத் தீர்மானிக்க முடியாத பல நேரங்களில் இந்தச் சோதனைக்குழாய் முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த பத்தாண்டுகளாக இந்தச் சிகிச்சை முறை பெருமளவு பிரபலமடைந்துள்ளது. ஆனால் இதற்கு ஆகும் செலவும் அதிகம். உயர் பயிற்சி பெற்ற நிபுணர்களும் தேவை. இதில் நான்கு அல்லது ஐந்தில் ஒன்றுதான் சிறந்த பலன் தருவதாய் உள்ளது.

எந்தப் பிணியையும் சமாளிக்க முதலாவதாகச் செய்யவேண்டியது அதனைத் தடுக்க முயல்வதேயாகும். பிறவிக் கோளாறுகள் விந்து உற்பத்தியில் உள்ள கோளாறுகள் அல்லது மருந்துகளால், சூழ்நிலையால் அல்லது மன இறுக்கங்களால் உண்டாகும் மலட்டுத்தன்மைக் கோளாறுகள் போன்றவற்றைத் தடுப்பதென்பது கடினமான காரியம் தான்.

ஆனால், பிறப்பு உறுப்பு களில் ஏற்படும் தொற்றுகளை இருபாலரிடமும் தடுக்கமுடியும். கிளாமிடியா ¬Chlamydia) கொனோரியா •Gonorrhoea) போன்ற பால்வினை நோய்களே இத்தகைய தொற்றுகளுக்குப் பெருங் காரணம். என்றாலும், மலட்டுத்தன்மையை உண்டாக்கும் இத்தகைய தடுக்கப்படக்கூடிய காரணங்களை முறையான சுகாதாரக் கல்வி, சமுதாய ஒழுக்கம், பாலியல் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு குறிப்பிடத்தகுந்த அளவு குறைத்துவிட முடியும்.

'நன்றி: நல்வழி'

# காவிரிப்பாசனப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி

எஸ், ஜெயராமன்
பி. நளாயினி
அ. சேக்தாவுது
அ. அப்துல் கரீம்
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்

சணல் பயிர் நார்வகைப் பயிராகும். நார்வகைப் பயிர்களில் பருத்திக்கு அடுத்து சிறப்புடையது சணலாகும். சணல் பயிரிலிருந்து கிடைக்கும் நார் மென்மையும், வலிமையும் உடையது. இந்த நாரிலிருந்து சணல், கோணிப்பை அல்லது சாக்கு, பல வகையான கயிறுகள், தரை விரிப்புகள், காகிதம், பல பயனுள்ள அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் சணல் பயிர் சுமார் 8 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 10.8 இலட்சம் டன் சணல் நார் உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் தற்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் சணல் பயிர்ச் சாகுபடி செய்யப்படுகின்றது. சணல் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மகசூலைப் பெருக்கிடவும் அகில இந்திய ஒருங்கிணைந்த சணல் பயிர் ஆராய்ச்சித் திட்டம் தற்பொழுது தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறையில் செயல்படுகின்றது. இந்த ஆராய்ச்சியின் பலனாக காவேரி டெல்டாப் பகுதியில் சணல் பயிர்ச் சாகுபடி செய்து அதிக வருமானம் பெற வாய்ப்பு உள்ளது.

சணல் பயிர்ச் சாகுபடிக்கு மணற்பாங்கான வண்டல், ஆற்று வண்டல், வண்டல் மிகுந்த களி மண் முதலியன ஏற்றவை. இப்பயிரை தை முதல் சித்திரைப் பட்டங்கள் வரை விதைகளை விதைத்துச் சாகுபடி செய்ய வேண்டும். எள், உளுந்து பயிர்களுக்கு மாற்றுப் பயிராகக் கோடையில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்றது.

சணல் விதைகள் மிகச் சிறியதாக இருப்பதால் நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும். கடைசி உழவில் எக்டேருக்கு 5 டன்கள் அதாவது பத்து வண்டிகள் தொழு எரு இட வேண்டும். அத்துடன் அடியுரமாக இரசாயன உரங்களில் தலா 20 கிலோ வீதம் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இட வேண்டும். நீர்ப்பாசன வசதிகளுக்கு ஏற்பப் பாத்திகளை அமைக்க வேண்டும்.

சணல் பயிரில் 'ஒலிடோரியஸ்' என்ற டோசா சணலும் 'கேப்சுலாரிஸ்' என்ற வெள்ளைச் சணலும் உள்ளன. டோசா சணல் வகையில் ஜே.ஆர்.ஓ. 524, ஜே.ஆர்.ஓ.878, ஜே.ஆர்,ஓ.7835 என்ற இரகங்களும், வெள்ளைச் சணல் வகையில் ஜே.ஆர்.சி.212, ஜே.ஆர்.சி.321, ஜே.ஆர்.சி.7447 இரகங்களும் சாகுபடிக்கு ஏற்றவை.

சணல் விதைகளைக் கைத் தெளிப்பு முறையிலும் வரிசை விதைப்பு முறையிலும் விதைக்கலாம். கைத்தெளிப்பு முறையில் தெளிக்க எக்டேருக்கு 9 கிலோ விதையும், வரிசையில் விதைக்க எக்டேருக்கு 6 கிலோ விதையும் தேவைப்படும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியிலும் செடிக்குச் செடி 5 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும். அதிக மகசூலுக்கு ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 67 செடிகள் இருக்க வேண்டும்.


விதை விதைத்த 20-25 நாட்களில் முதல் கைக்களையும் 35-40 நாட்களில் இரண்டாவது கைக்களையும் எடுக்க வேண்டும். கூலியாட்கள் கிடைக்காத சூழ்நிலையிலோ அல்லது கைக்களை எடுக்க அதிகச் சாகுபடி செலவு ஆகும் சமயங்களிலோ சணல் விதைகளை விதைப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்போ அல்லது விதைத்த மூன்று நாட்கள் கழித்தோ 'புளுகுளோராலின்' என்றகளைக்கொல்லி மருந்தை எக்டேருக்கு 1.5 முதல் 2 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். பின்னர் விதைத்த 30-35 நாட்களில் ஒரு கைக்களை எடுத்தால் களைகளை நன்கு கட்டுப்படுத்தலாம்.

மேலுரமாக 10 கிலோ தழைச் சத்தை முதல் களை எடுத்த பின்பும் (20-25 நாட்கள்) மேலும் ஒரு முறை 10 கிலோ தழைச் சத்தை இரண்டாவது களை எடுத்த பின்பும் (35-40 நாட்களில்) இட வேண்டும். வறட்சிக் காலங்களில் அல்லது உரப் பற்றாக்குறை சமயங்களில் கைத் தெளிப்பான் மூலம் எக்டேருக்கு 8 கிலோ தழைச்சத்து வீதம் 40-45 நாளில் ஒரு முறையும் 70-75 நாளில் மற்றொரு முறையும் 2 சதம் யூரியா கரைசலை (20 கிராம் யூரியா ஒரு லிட்டர் தண்ணீரில்) தெளித்துப் பயன் பெறலாம்.

சணல் நாரப் பயிரில் பச்சைத் தண்டுகளின் உயரம் மற்றும் எடை ஆகியவற்றைப் பொறுத்தே மகசூல் கிடைப்பதால் தண்ணீர்ப் பற்றாக் குறை இன்றிச் சாகுபடி செய்ய வேண்டும். சணல் பயிருக்கு 500 மி.லிட்டர் தண்ணீர் தேவைப் படுகிறது. விதைகள் விதைத்தவுடன் முதல் தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு, மண்ணின் தன்மைக்கேற்ப உயிர்த் தண்ணீர் கட்ட வேண்டும். பிற்பாடு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போது மானது. சணல் பயிரில் டோசா வகை ரகங்கள் வறட்சியிலும் நன்கு வளரக் கூடியது. வெள்ளைச் சணல் ரகங்கள் நீர் தேங்கிய பகுதிகளிலும் நன்கு வளரக் கூடியது.

பொதுவாக, கூன் வண்டு, மஞ்சள் மற்றும் சிவப்பு சிலந்திப் பூச்சி, புழுக்கள் போன்றவை சணல் பயிரைத் தாக்கும் பூச்சிகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்த எண் டோசல்பான், ஜெல்த்தேன், பாஸோ லோன் போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை விதைத்த 45 நாட் களிலிருந்து 15 முதல் 20 நாட் களுக்கு ஒருதடவை தேவைக்கு ஏற்ப தெளிக்க வேண்டும். நோய்களில் தண்டு அழுகல் மற்றும் வேரழுகல் நோய் சணல் பயிரைப் பாதிக்கின் றன. இவைகளைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ சணல் விதைகளுடன் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளாக அக்ரோசான் 5 கிராம், டைத்தேன் எம்.45 5 கிராம், பாவிஸ்டின் 2 கிராம் போன்ற ஏதேனும் ஒரு மருந்தினைக் கொண்டு விதை நேர்த்தி செய்து நோய்களைக் கட்டுப் படுத்த வேண்டும்.

சணல் பயிரை விதைத்த 100 முதல் 110 நாளில் அறுவடை செய்யலாம். செடியில் இளங் காய்கள் தோன்றும்பொழுது அறு வடை செய்தால்அதிகஅளவுதரமான நார் மகசூலைப் பெற இயலும். பயிர் சுழற்சித் திட்டத்திற்கும், சூழ்நிலைக்கும் தகுந்தவாறு அதிகப் பட்சமாக 120 முதல் 140 நாட்கள் கழித்தும் அறுவடை செய்யலாம். அறுவடை செய்த பின்பு 20 முதல் 30 சணல் தண்டுகளை வைத்து கட்டுக் கட்டாகக் கட்ட வேண்டும். இவற்றை வயலிலேயே இரண்டு



சணல் பயிர்

மூன்று நாட்கள் செங்குத்தாக நிறுத்தி வைக்க வேண்டும். இவ் விதம் செய்வதால் செடியில் உள்ள இலைகள் உதிர்ந்து விடும். இது நிலத்தின் தழைச்சத்தினையும் அங் ககப் பொருட்களின் அளவையும் அதிகரித்து மண்வளத்தை அதி கரிக்கப் பயன்படுகிறது.

அறுவடை செய்த சணல் தண்டு களை 15 முதல் 20 நாட்கள் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். பின்பு நாரினையும், தண்டுகளையும் பிரித்தெடுக்க வேண்டும். பச்சைத் தண்டுகளின் மகசூலாக எக்டேருக்கு 45 முதல் 50 டன்களும், சணல் நார் மகசூலாக எக்டேருக்கு 30 முதல் 32 குவிண்டால் வரையிலும் கிடைக்கின்றது.

ஒரு டன் பச்சைத் தண்டுகளின் விலை ரூ.300 ஆகும். சணல் நார்ப்பயிர்ச் சாகுபடி செய்ய எக்டேருக்கு ரூ.6000 வரை தேவைப் படுகிறது. சணல் பயிரை நல்ல முறையில் சாகுபடி செய்வதால் 110 நாட்களில் எக்டேருக்கு நிகர இலாபமாக ரூ.9000 பெறமுடியும்.


பச்சைத் தண்டுகளை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட முகவரி களைத் தொடர்பு கொள்ளலாம்.

1. தலைமை நிர்வாகி
   சென்னை சணல் தொடர்பக
   நிறுவனம்
   எக்சேஞ்ச் ஹால், எண்-1
   காலேஜ் ரோடு
   புதிய நகர்
   கிழக்கு குரோம்பேட்டை
   சென்னை-600 044
2. விவசாய வாணிபக் கழகம்
   சென்னை சணல் தொடர்பக்
   நிறுவனம்
   அக்ரகார வீதி
   புலவனூர்-607 205
   அண்ணா கிராமம் ஒன்றியம்
   பண்ருட்டி வட்டம்
   தென்னார்க்காடு மாவட்டம்

சணல் சாகுபடி நுட்பங்கள் சம் பந்தமான விவரங்களை மேலும் தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட முக வரியில் தொடர்பு கொள்ளலாம்:

**இயக்குநர்**
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்
ஆடுதுறை-612 101
தஞ்சாவூர் மாவட்டம்

# ஆதிதிராவிடர் நலம்



ஆதிதிராவிடர் சமுதாயத்தினர் சமூகத்தில் உள்ள மற்றவர்களைப் போல வாழ்க்கை நிலையில் முன்னேற்றமும், பொருளாதார நிலையில் உயர்வும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு எனத் தனியாகப் பல திட்டங்களை அரசு தீட்டி விரைவாக நிறைவேற்றி வருகிறது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வினையொட்டி ரூபாய் ஒரு கோடி செலவில் மணி மண்டபம் ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளதும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் நூல் நிலைய வசதி செய்யப்படவுள்ளதும், ஆதிதிராவிடர் சமுதாயத்தினருக்குத் தமிழக அரசு அளித்த பரிசுகளாகும்.

இந்தியாவிலேயே முதல் முறையாக ஆதிதிராவிடர்களுக்கு எனத் தனியாகத் தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. கோவை, பெரியார் மாவட்டங்களில் அமையவிருக்கும் தொழிற்பேட்டைகளில் தலா 100 தொழிற்கூடங்கள் வீதம் 200 தொழிற்கூடங்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கென அமைக்கப்பட உள்ளன. 80 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தைத் தமிழக அரசு உருவாக்குகிறது.

இறால் வளர்ப்பு நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் இலாபம் மிகுந்துள்ள தொழில் ஆகும். தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதிகளில் ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் ஒரு எக்டேர் வீதம் நிலம் வழங்கப் பட்டு, இறால் வளர்ப்புப் பண்ணை ஒவ்வொன்றும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு அவற்றில் இறால் வளர்க்கும் திட்டத்தை விரைவில் தமிழக அரசு செயலாக்க உள்ளது. இத்திட்ட அமலாக்கத்தில் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த விதவைப் பெண்கள் ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தமிழகத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நல்ல இலாபம் ஈட்டக் கூடிய தொழிலாக இருந்து வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர்த்து தமிழ்நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களில் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்புக்குத் தேவையான பாசன வசதி, பட்டுப்புழு வளர்ப்புக் கூடங்கள், அதற்குத் தேவையான உபகரணங்கள் ஆகியவைகளும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வழங்கப்படும். 400 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் இத்திட்டத்தில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.


இதுமட்டுமின்றி நிலச் சொந்தக்காரர்களாக உள்ள ஆதிதிராவிடர் 4,000 நபர்களுக்கு அவர்களுடைய நிலத்தில் பட்டுப்புழு வளர்ப்பைத் தொடங்க வசதிகள் செய்து கொடுக்கப்படும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உதவியுடன் தமிழக அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கும்.

## ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக தாட்கோ மூலம் நிதியுதவி

ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது தாட்கோ மூலமாகச் சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தனித் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் (1992-93) 2000 இந்து ஆதிதிராவிடர் பயனடையும் வகையில் ரூ.31 கோடி திட்ட மதிப்பீட்டுடன் கூடிய ஒரு திட்டத்தினை 22 மாவட்டங்களில் செயல்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி செயல் திட்டம் அரசு மானியம் ரூ.3 கோடிக்கும், விளிம்புத் தொகை ரூ.4 கோடிக்கும் மற்றும் வங்கிக் கடன் 24 கோடிக்கும் வகை செய்கிறது.

சேலம் அரசு அருங்காட்சியகத்தில்

# இயற்கைப் பாதுகாப்புப் பயிற்சி முகாம்



சேலத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில், ஓமலூர் சாலையில் சேலம் அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ளது. 11.2.1976-இல் தனியாரின் முயற்சியால் தொடங்கப்பட்ட இவ்வருங்காட்சியகம், 1.4.1979-ஆம் ஆண்டு அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு, கடந்த 16 ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

அருங்காட்சியகத்தில் கற்சிலைகள் பிரிவு, முந்து வரலாற்றுப் பிரிவு, தாவரவியல் பிரிவு, விலங்கியல் பிரிவு, நாணயவியல் பிரிவு, புவி அமைப்பியல் பிரிவு, பண்பாட்டியல் பிரிவு, ஓவியங்கள் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளன. அருங்காட்சியகத்தில் மேற்கண்ட பிரிவுகளில் காட்சிப் பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதோடு, பல்வேறு கல்விப் பணிகளும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

கல்வி சம்பந்தப்பட்ட பல்வேறு சொற்பொழிவுகள், காட்சி வில்லைப் படங்கள் (Slides), கண்காட்சிகள், கருத்தரங்குகள், செயற்களங்கள், பயிற்சி வகுப்புகள், சிறுவர் ஓவியப் போட்டிகள், வினாடி-வினாப் போட்டிகள் ஆகியவை அருங்காட்சியகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும், பொதுமக்களுக்காக வாரம் ஒரு முறை கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன. இக்கல்விப் பணிகளினால் மாணவர்களும், பொதுமக்களும் மிகுந்த பயனடைகின்றனர்.

அண்மையில், புதிய நிகழ்ச்சியாக 'இயற்கைப் பாதுகாப்பு' (Nature Conservation) என்ற பயிற்சி முகாம் மாணவர்களுக்காக அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. 3.6.92 முதல் 6.6.92 வரை நான்கு நாட்களுக்கு நடத்தப்பட்ட இப்பயிற்சி முகாமில், சேலம் அரசு கலைக்கல்லூரி, வைஸ்யா கல்லூரி, சேலம் சட்டக் கல்லூரி, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளின் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கு பெற்ற மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களாவர்.

இப்பயிற்சி வகுப்பின் நோக்கம், நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்துவதேயாகும். இருபதாம் நூற்றாண்டின் முடிவில் இருக்கும் நாம் வெகுவிரைவில் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டைச் சந்திக்கவிருக்கிறோம். இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் மிகப் பெரிய பிரச்சினையாக மக்கட் தொகைப் பெருக்கமும், சுற்றுச் சூழல் பிரிச்சினையும் நம்மை எதிர்நோக்கியுள்ளன. காடுகள் வெகு விரைவாக அழிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களும், செயற்பாடுகளும் போதுமானதாக இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஒரு நாட்டின் வளமான வாழ்விற்கு அதன் மொத்த நிலப் பரப்பில், காடுகள் 33 சதவிகிதமாக இருப்பது மிகவும் இன்றியமையாததென்று வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால், நமது நாட்டில் 15 சதவிகிதத்திற்கும் குறைவாகவே காடுகளின் பரப்பு அமைந்துள்ளது. மேலும், வன விலங்குகளை அழித்தலும், மனிதனின் செயற்பாடுகளினால் சுற்றுச் சூழல் மாசுபடுதலும் கவனிக்கத் தக்கதாகும்.

இப்பயிற்சி வகுப்பின் முதல் நாளன்று, உயிரினங்களும் அதன் சுற்றுச் சூழலும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பது பற்றியும், காடுகளின் முக்கியத்துவமும், அதன் அழிவினால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. மனிதனின்றித் தாவரங்களி

ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்

னால் வாழ முடியும், ஆனால், தாவரங்களின்றி மனிதனால் வாழ முடியாது என்ற அடிப்படை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இரண்டாம் நாளன்று, இந்தியாவில் காணப்படும் காடுகளின் வகைபாடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும்; இந்திய வன விலங்குகளின் வகைபாடுகளையும், அவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் உணர்த்தும் வகையில் சொற்பொழிவுகளும், படக்காட்சிகளும் அமைந்திருந்தன.

பசுமை மாறாக் காடுகள், இலையுதிர் காடுகள், முட்புதர்க் காடுகள், சதுப்பு நிலக்காடுகள் ஆகிய பல வகைக் காடுகளும், உயிரினங்களைப் பாதுகாப்பதில் அவற்றின் பங்கு, அல்லது உயிரினங்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பது போன்றவை விளக்கப்பட்டன. மாணவர்களுக்கு உயிரினங்களைக் கண்டு மகிழும் ஈர்ப்புச் சக்தி அதிகமாக வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் வன விலங்குகள், தாவரங்கள் பற்றிய எழில் மிகு காட்சி வில்லைப் படங்கள், சொற்பொழிவுகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

மூன்றாம் நாளன்று; சுற்றுச் சூழல் மாசு படுதல் (Pollution), மாசு படுதலின் வகைகள், அதனால் ஏற்படும் பாதிப்பு அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பன பற்றியும் விளக்கம் தரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளால் சுற்றுச் சூழல் மிக அதிக அளவில் பாதிக்கப்படுகிறது. மேலும், மாசுக் கட்டுப்பாடு என்பது வளர்ந்துவரும் நாடுகளிலும் முக்கியப் பிரச்சினை ஆகிவிட்டது. இவற்றை மாணவர்கள் தெளிவாக அறியும் வண்ணம் படக்காட்சிகள், சொற்பொழிவுகள் நடைபெற்றன.

நான்காம் நாளன்று; நீர்-நிலம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும், இவற்றை எவ்வாறு அதிகப் பயன் பெறும் வகையில் பயன்படுத்த இயலும் என்பது பற்றியும் விளக்கப்பட்டது. மேலும், சக்தியை (Energy) சேமிப்பது எவ்வாறு என்பது பற்றியும், மாற்றுச் சக்திப் பொருட்களின் (Alternative Energy Sources) தத்துவம் பற்றியும் விளக்கப்பட்டது.

வரலாறு, கலை, அறிவியல் முதலிய பல்வேறு கல்விப் பிரிவில் படிக்கும் இம்மாணவர்கள், இந்த நான்கு நாட்கள் பயிற்சி வகுப்பின் மூலம் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை மிகவும் உணர்ந்தவர்களாயினர்.



இப்பயிற்சியில் பங்கு கொண்ட மாணவர்கள் அனைவரும் இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்த செயல்வீரர்களாக, இக்கருத்தை மற்றவர்களிடையே பரப்புபவர்களாக, தம் கல்லூரிகளிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பவர்களாகத் திகழ்வார்கள் என்று பெரும் நம்பிக்கை கொள்ளலாம்.

இயற்கையைக் கண்டுகளிக்கும் பொருட்டு, மலை வழிப் பயணமாக (Trekking Programme) மாணவர்களை அழைத்துச் செல்லுதலிலும், இயற்கை சூழ்ந்த வனப்பகுதிகளில் வினாடி-வினாப் போட்டிகள், ஓவியப் போட்டி நடத்துதலிலும், சேலம் அருங்காட்சியகம் ஏற்கெனவே முன்னோடியாக உள்ளது. அருங்காட்சியக வளாகத்தில் தற்பொழுது நடத்தப்பட்ட இப்பயிற்சி வகுப்பை சேலம் மாவட்ட வனப் பாதுகாவலர் திரு. எஸ். பாலாஜி அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தம் தொடக்கவுரையின்போது, அழிந்து வரும் காடுகளின் முக்கியத்துவம் பற்றியும், மாணவர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கைப் பற்றியும் விரிவாகப் பேசினார். பயிற்சியின் நிறைவு நாளன்று சேலம் ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.எம்.வெள்ளியங்கிரி அவர்கள், மாணவர்கள் இயற்கையைக் கண்டு மகிழ்வதன் அவசியத்தை எடுத்துரைத்து, பங்கு பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

## சென்னைக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம்

**சென்னை மெரீனா கடற்கரையில், ரூ.5 கோடி செலவில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்று அமைக்கப்படுகிறது.**

**கடலில் உயிரினங்கள் எப்படி வாழ்கிறதோ, அதே அமைப்பில் கடலைப் போலக் காட்சியகம் அமைக்கப்படும். ஆசியா கண்டத்திலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் அமைக்கப்படும்.**

**இந்த காட்சியகம் அமைக்கும் திட்டத்தில் முதல்கட்டமாக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் துவக்கப்படவுள்ளன. இந்த காட்சியகத்தின் கடல்வாழ் உயிரினங்களான ஜால், டால்பின் போன்ற மீன் வகைகள் கடலில் உள்ளது போல இங்கு அமைக்கப்பட்டிருக்கும்.**

# நூல் நயம்

### கிரியா யோகம்

**மூலம்: நித்யா முக்தானந்தா**
**தமிழில்:** மகரிஷி க. அருணாசலம்
பக்கம்:52 விலை:ரூ.6/-

ரிஷிகேசம், தெய்வநெறிக்கழக நிறுவனரான பரமஹம்ச சிவானந்தரின் முதன்மை மாணாக்கரான நித்ய முக்தானந்தர், பல ஆண்டுகள் தமது குருநாதரின் நேர்ப் பார்வையில் 'கிரியா யோகம்' பயின்று அனுபவம் அடைந்தவர். அவர் எழுதிய ''கிரியா யோக்'' என்ற இந்தி நூலின் தமிழ் வடிவம் இது.

'கிரியா யோகம்' என்றால் என்ன?

யோக நூல்களில் சொல்லப்படும் பதினைந்து நாடிகளில் மிக முக்கியமானவை மூன்று நாடிகள். பிங்கலை, இடா, ஸுஷும்னா (சுழுமுனை) என்பன. சுழுமுனை மிக முக்கியம் வாய்ந்தநாடி. சாதாரணமாக காற்று மூக்குத் துவாரங்கள் வழியாக போய்வந்து கொண்டிருக்கிறது. சுழுமுனைநாடி புருவங்களிலிருந்து புருவங்களின் மத்தியில் திருகுடி என்னும் இடத்திலிருந்து முதுகந்தண்டின் அடிநுனிவரை இருக்கிறது. இந்த அடிநுனியை மூலாதாரம் என்கின்றனர். மூலாதாரம் ஒரு விரற்கடை அளவுக்கு மூடியுள்ளது. இதை ஒரு மனப் பயிற்சியால் வெப்ப மூட்டி கரைத்து அங்குள்ள உயிர் ஆற்றலை சுழுமுனை குழல்வழியே திரிகுடிக்கு ஏற்றுகின்றனர். ஏறிய ஆற்றல் அவ்வழியே இறங்குகின்றது. இப்படி விரும்பியபோது ஏற்றவும் இறங்கவும் செய்யும் செயலே கிரியா யோகம்.

உடலோம்பலில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் உயிர் எடுத்ததன் பயனை இழந்துவிடாமல் உயிரை வளர்க்கும் இந்தத் தந்திரத்தை பயின்றுபயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந் நூலை தமிழில் தந்துள்ளதாகச் சொல்கிறார் அறிஞர் மகரிஷி க. அருணாசலம். அவரின் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

பிரணாயாமம் செய்வோருக்குப் பெரிதும் பயன்படும் இந்நூல்.

—மாமூலன்

### குறள் வழிச் சிந்தனைகள்

**ஆசிரியர்:** ப. முருகன்
**வெளியீடு:**
தி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை-98.

பக்கம்:142 விலை:ரூ.14/-

வான்புகழ் வள்ளுவர் பெருமை பேசும், பைந்தமிழ்க் கட்டுரைகளின் பெட்டகம். இரண்டடித் திருக்குறள் குறித்த 27 கட்டுரைகள் இந்நூலில் அடக்கம்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., சிலம்பொலி செல்லப்பன், சி.பா., முதலான தமிழறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் கவின்மிகு தொகுப்பு.

### உடற்கல்வியும் சுகாதாரக் கல்வியும்

**ஆசிரியர்கள்:** எஸ். டேவிட்சன்
வை. இளங்கோ
**வெளியீடு:**
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-வது தெரு,
சென்னை-14.

பக்கம்:213 விலை:ரூ.25/-

உடல் நலம் பெற உடற் பயிற்சிகள் இன்றியமையாததாகிறது. அவற்றை வலியுறுத்துகிறது இந்தப் புத்தகம். எளிய நடையில், தக்க விளக்கப் படங்களும் உள்ளன. பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள கையேடு.

கீழ்க்காணும் இரண்டு நூல்களும் மதுரை, காந்திய இலக்கியச் சங்கத்தால் வெளியிடப் பெற்றவை.

**1. பிரார்த்தனை அர்த்தமும் ஆற்றலும்**
விலை:ரூ.5 பக்கம்:48

அண்ணல் காந்தியடிகள் பிரார்த்தனை என்ன? ஏன்? எப்படி? என்பதை விளக்கும் கையேடு.

**2. பதினொரு மகா விரதங்கள்**
விலை:ரூ.5 பக்கம்:58

அண்ணல் காந்தியடிகள் மேற்கொண்ட விரதங்கள் குறித்து விளக்கும் நூல் இது. சத்தியம், அகிம்சை, எளிய வாழ்க்கை முதலான பண்புகளின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்கிறோம்.

### எங்கள் போதிமரம்

**ஆசிரியர்:** தென்னம்பட்டு ஏகாம்பரம்,
**வெளியிட்டோர்:**
கலைஞன் பதிப்பகம்,
10, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

பக்கம்:124 விலை:ரூ.16/-

கவியரங்கில் பாடிய கவிதைகள், தனிக் கவிதைகள், ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம் என 33 தலைப்புகளின் கீழான கவிதைத் தொகுப்பே இந்நூல்.

கடலில் சிறிது தூரத்திற்கு அலை; அதன்பின் அமைதியான நீர்ப்பரப்புப் போல, இந்நூலின் தொடக்கப் பக்கங்கள் சிலவற்றில் மரபுக் கவிதைகள்; அதன்பின் புதுக் கவிதைகள் காணப்படுகின்றன; ஒன்று அப்படி இருந்திருக்கலாம் அல்லது இப்படியிருந்திருக்கலாம் என்பது நம் எண்ணம். ஆனால், ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற நினைவில் ஆசிரியர் எழுதியிருக்கலாமோ என்னவோ?

அத்தனைக் கவிதைகளிலும் புதுப் புதுச் சொல்லாட்சிகள் - புதுக் கற்பனைகள் - புதுப்புது கருத்துக்கள் இருப்பது படிக்கும் எவருக்கும் மன நிறைவளிக்கும்.

-'சோழராஜா'.

### உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள்

**ஆசிரியர்:** கே.ஜி.எஃப். பழனிச்சாமி
**வெளியீடு:**
சேது அலமி பிரசுரம்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:104 விலை:ரூ.13/-

"உழைப்பை விற்கலாம்; ஆன்மாவை விற்க முடியாது. இதயத்தில் ஈரமும், இரத்தத்தில் சூடும், மூளையில் விரைவும், ஆன்மாவில் சாந்தியும் பெறுவோர் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள்' ரஸ்கின் சொன்ன பொன்மொழி இது. இதுபோன்ற நம்நாட்டு, மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் சிந்திய சிந்தனை முத்துக்கள் அடங்கிய நூல்.

### பரீட்சையில் நிறைய மதிப்பெண் பெறுவதற்கு ஏற்ற வழிகள்

**ஆசிரியர்:** எஸ்.ஆர். கோவிந்தராஜன்
**வெளியீடு:**
கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:80 விலை:ரூ.10/-

பள்ளிக்கூடமெல்லாம் இப்போது திறந்திருக்கிறது. மாணவர்கள் புத்தகச் சுமையோடு சென்று கொண்டிருக்கிறார்கள். தேர்வுகளும் ஒவ்வொன்றாக வரவிருக்கின்றன. வருகின்ற தேர்வுக்கு இப்போதிலிருந்தே தயாராக வேண்டும். அதற்கு வழி காட்டுகிறது இந்நூல். 'தேர்வில் வெற்றி பெறுவது எப்படி?' இதற்கு விளக்கம் தரும் கையேடு.

- பி.வி. கிரி.



# வன விலங்குப் புகலிடங்கள்

தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம்,கர்நாடக மாநிலங்களில் இருக்கும் முக்கியப் பறவை சரணாலயங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

தமிழ்நாடு: முதுமலை, கோடிக்கரை, ஆனைமலை, முண்டன் துறை, களக்காடு, கிண்டி, வேடன்தாங்கல்.

கேரளம்: தேக்கடி (பெரியார்), இராவிகுளம்.

கர்நாடகம்: பாண்டியூர், நாகர் ஹலே, ரங்கன்திட்டு.

ஆந்திரம்: நெல்லப்பட்டு.

முதுமலை நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் மைசூர் செல்லும் பாதையில் இந்தச் சரணாலயம் உள்ளது. அடர்ந்து வளர்ந்த தேக்கு மரங்களும், மூங்கில் புதர்களும் மிகுதியாக நிறைந்த வனப்பகுதி இது. இங்கே யானை, காட்டெருமை, கடமான், புள்ளிமான், காட்டு நாய் (Dhole) சிறுத்தை, மலைப்பாம்பு, நீர்நாய், முதலை போன்ற விலங்குகளும் பல்வகைப் பறவைகளும் வாழ்கின்றன.

ஒவ்வோராண்டும் பிப்ரவரி மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை இந்தச் சரணாலயத்தைச் சுற்றிப் பார்க்க ஏற்ற பருவம். அபயாரண்யம், கார்குடி மிசினகுடி, தெப்பக்காடு போன்ற இடங்களில் தங்குமிடமும், உண்ணும் வசதிகளும் உள்ளன. தெப்பக்காட்டில் இந்திய அரசு சுற்றுலாத் துறையின் இளைஞர் விடுதி இருக்கிறது. உதகை மைசூர் பேருந்தில் சென்று தெப்பக்காட்டில் இறங்கிக் கொள்ளலாம். முன்கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ள Wild Life Warden, Mahalingam Buildings, Coonoor Road, Ooty என்ற முகவரிக்கு எழுதலாம்.

**கோடிக்கரை சரணாலயம்**


தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்துக்கு அருகே உள்ளது. இங்கே சதுப்பு நிலங்களும், கடலோரத்தில் சிறிய காடும் இருக்கின்றன. புள்ளி மான், பிளாக் பக், பெரல் போனிஸ், பெரல் பன்றிகள், குள்ள நரிகள், முயல்கள் போன்ற விலங்குகளும், பூநாரை (Flammingo) போன்ற நீர்ப் பறவைகளும், கடற்கரையில் கல்ஸ் (Gulls) டெர்ன்ஸ் (Terns), ntl; வேடர்ஸ் (Waders) போன்ற பறவையினங்களையும் காணலாம்.

**சுற்றுலாப் பயணிகளுக்கு ...**

பூநாரை இல்லம் என்னும் ஓய்வு மாளிகை 'சுற்றுலாப் பயணிகளுக்கென்று இருக்கிறது. திருத்துறைப் பூண்டியிலிருந்து புகை வண்டி, பேருந்து மூலமாகச் செல்ல வசதியுண்டு. மேலும் விவரங்களை அறியத் தஞ்சை மாவட்டக் காட்டிலாகா அலுவலருடன் தொடர்பு கொள்ளலாம்.

**ஆனைமலை சரணாலயம்**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இது உள்ளது. ஆனைமலையில் உள்ள 'டாப்ஸ்லிப்' (Top Slip) என்ற இடத்திலிருந்து சரணாலயத்தின் எல்லை துவங்குகிறது. அடர்த்தியான மழைக் காடுகளும், தேக்கு மரங்களும், ஆனைமலையில் உள்ளன. சிங்கவால் குரங்கு (Lion Tailed Mecaque) நீலகிரி வரை ஆடு (Nilgiri Tahr), யானை, காட்டெருமை, சிறுத்தை, கரடி, காட்டுப்பன்றி, காட்டு நாய், நீலகிரி லங்கூர் குரங்கு, கடமான், புள்ளிமான், நான்கு மரிமான்,



பலவிதமான அணில்கள் போன்றவற்றை இங்கே காணலாம். புலிகள் இருப்பது தெரிந்தாலும், அபூர்வமாகவே தென்படுகின்றன.

டாப் ஸ்லிப்பில் தங்கவும், உண்ணவும் வசதி உண்டு. பொள்ளாச்சியிலிருந்து பரம்பிக்குளம் செல்லும் பேருந்து இவ்வழியாகச் செல்லுகிறது.

**இடவசதிக்கு:**

Wild Life Warden
Annamalai Sanctuary
Mahalingapuram, Pollachi.
என்ற முகவரியை அணுகலாம்.

**முண்டன்துறை சரணாலயம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ளது. வறண்ட இலையுதிர்க் காடுகளை இந்தச் சரணாலயத்தில் அதிகம் காணலாம். இங்கே புள்ளிமான், கடமான், கரடி, குரங்குகள், காட்டு நாய், சிறுத்தைப் புலி, முதலியவைகளைக் காணலாம். சிங்கவால் குரங்குகள் இங்கு நிறைய இருக்கின்றன.

அக்டோபர் முதல் ஜனவரி வரை சுற்றுலா சென்று மிருகங்களைக் காணலாம். இங்கே தங்க வசதியும், உண்ண வசதியும் உண்டு.

**தேவைகளுக்கு:**

Wild Life Warden,
Shencottai-2
என்ற முகவரியை அணுகவேண்டும்.

**களக்காடு சரணாலயம்**

திருநெல்வேலி நகரத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது களக்காடு எனும் கிராமம். அங்கிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் இந்தச் சரணாலயம் தொடங்குகிறது. இந்தச் சிங்கவால் குரங்குகளுக்குப் புகழ்பெற்ற இடம். ஒரே இடத்தில் 4 வகைக் குரங்குகளையும், அதாவது சாதாரணக் குரங்கு, நீலகிரிக் குரங்கு, பானட் மெக்காக் (Bonnet Meccaque) சிங்கவால் குரங்கு அனைத்தையும் காணலாம். நீலகிரிக் காட்டாடு, கடமான் வகை, கரடி, காட்டெருமை, யானை, புலி, பறக்கும் அணில், சிறுத்தை, காட்டு நாய், பாங்கோலின் (Pangolin) உட்பட பல விலங்குகள், பல வகைப் பறவைகள், ஊர்வன ஆகியவற்றை இங்கே காணலாம்.

செப்டம்பர் தொடங்கி மார்ச் வரை நல்ல பருவம், சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் 'செங்கலத்தேரி இல்லம்' என்னும் தங்கும் இல்லம் உள்ளது. இதற்கு நடந்துதான் செல்ல வேண்டும். உணவுக்கு வேண்டியவற்றைக் களக்காடு கிராமத்திலிருந்து தான் கொண்டு செல்ல வேண்டும்.

**மற்ற விவரங்களுக்கு,**

Wild Life Warden,
Kalakadu Sanctuary,
Tirunelveli
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

**வேடந்தாங்கல் பறவை சரணாலயம்**

சென்னையிலிருந்து சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தச் சரணாலயம், கருங்குழியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள வேடந்தாங்கல் கிராமத்தில் ஒரு சிறிய பாசன ஏரியில் நிறையக் கடம்ப மரங்கள் உள்ளன. நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரையில் இங்கே கார்முரன்ஸ் (Carmorants), ஈக்ரேட்ஸ் (Egrets), சாம்பல் நிறக் கொக்குகள், ஹெரான்ஸ் (Herons), அகலவாய் கொக்குகள் (Open billed Stocks), டார்டர் (Darter), ஸ்பூன் பில் (Spoon Bill), வெள்ளை இப்பிஸ் (White Ibis), நைட் ஹெரான் (Night Herons), கிரிப் (Crebe), கிரே பெலிகன் (Gray Pelican), கார்கானி சிறவுகள் (Garganey), ஷாவெலஸ் (Shovellers), துடுப்பு வால் பறவைகள் (Pin Tails), வாத்துகள், உள்ளான்கள், சேன்டு பைப்பர் (Sand Pipers) போன்ற இடம் பெயர்ந்து வரும் பறவைகளும் இங்கேயே இருக்கக்கூடிய சூட்ஸ், கடல் அலா (Terns) நீர்க்கோழி (Moorhens) ஆகிய பறவைகளையும் இங்கே காணலாம்.


தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகத்திலிருந்து வேடந்தாங்கலுக்குப் பேருந்து வசதி உண்டு. தங்குவதற்கு உணவு வசதியுடன் கூடிய வனத்துறை ஓய்வு இல்லம் உள்ளது.

முன் ஏற்பாடு செய்துகொள்ள,

Wild Life Warden,
49, 4th Main Road,
Adyar, Madras-20
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**கிண்டி தேசியப் பூங்கா**

சென்னை நகரில் அடையாற்றுக்கும், கிண்டிக்கும் இடையே சுமார் 2.82 ச.கி.மீ. பரப்பளவில் இந்தப் பூங்கா அமைந்துள்ளது. புள்ளிமான், பிளாக்பக் (Black Buck) குள்ள நரி, ஏறத்தாழ 187 வகைப் பறவையினங்கள் இங்கு உள்ளன. சுற்றிப் பார்க்கச் சிறு கட்டணம் செலுத்த வேண்டும்.



கர்நாடக மாநிலம்

பண்டிபூர் சரணாலயம்

மைசூர், உதகை நெடுஞ்சாலையில் முதுமலை சரணாலயத்திற்கு அடுத்தாற்போல் உள்ளது. முதுமலையைப் போலவே, இங்கும் விலங்குகளும், பறவைகளும் உள்ளன. தங்கவும், உண்பதற்கும், ஓய்வு விடுதிகள் உள்ளன.

மேலும் விவரங்களுக்கு
The Field Director
Bandipur Tiger Reserve,
Government House Complex
Mysore City
என்ற முகவரியுடன் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

நாகர் ஹலே சரணாலயம்

இது மைசூரிலிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் யானை, புள்ளிமான், காட்டெருமை, காட்டுப்பன்றி, பானெட், மெக்காக் குரங்கு, காட்டுநாய் ஆகியவற்றைக் காணலாம். பெங்களூர், மைசூரிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு. உணவுடன் தங்க வசதியுண்டு.

தேவைகள் குறித்து:
Assistant Chief Conservator of Forests
Wild Life Sub-Division
18th Cross, Malleswaram
Bangalore
என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ரங்கன்திட்டுப் பறவை சரணாலயம்

மைசூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு அருகே உள்ளது. காவிரி ஆறு இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கப்பட்டிணத்தைச் சூழ்ந்து பின்பு ஒன்று சேருகிறது. இங்குள்ள சிறிய தீவுகளில் பறவைகள் கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கின்றன. நீர்க்காக்கை, Carmorants, Darter, Pondheron, Cattle Egrets, Night Heron, Egrets, Open Bill Storks, White Ibis, Spoon Bills, Flying Fox, Stone Plaver, River Tern முதலிய அநேக விதப் பறவைகளை இங்கு ஜூலை மாதம் முதல் காணலாம். சிறிய படகுகளில் ஏறி, பறவைகள் கூடு கட்டியுள்ள தீவுகளைச் சுற்றி வரலாம். இங்கே சில முதலைகளையும் காணலாம்.



கேரள மாநிலம்

இராவிகுளம் பூங்கா

மூணாறிலிருந்து சுமார் 22 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது இந்தச் சரணாலயம். உயர்ந்த மலைகளில் நீலகிரிக் காட்டாடுகளை இங்கு காணலாம். யானை, காட்டெருமை, கடமான், வரை ஆடு, நீலகிரிக் குரங்கு, சிங்கவால் குரங்கு, பெரிய அணில், சிறுத்தை போன்றவை இங்கு காணப்படுகின்றன.

அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சென்று காண நல்ல பருவம். மூணாறுக்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

தங்குமிடத்திற்கு
The Divisional Forest Officer,
Munnar, Idukki District
Kerala

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

# கருத்தடை செய்து கொண்டோர்க்குத் தங்கப்பதக்கம் பரிசளிப்பு

சென்னை மாநகரில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இரண்டாவது தங்கப் பதக்கக் குலுக்கல் 15.7.92 அன்று மாலை சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள மாநகராட்சி தாய்சேய் நல மையத்தில் நடைபெற்றது.

கடந்த ஜூன் மாதம் சென்னை மாநகராட்சி மருத்துவ மனைகள், அரசு மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகள், தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மருத்துவ மனைகளில் மொத்தம் 2,520 பேர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். இவர்களுக்குப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டிருந்தன. கூப்பன்களின் மறு பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, குலுக்கல் நடைபெற்றது. சென்னை மாநகராட்சியின் துணை ஆணையாளர் திரு. சி. சந்திரமௌலி இ.ஆ.ப., அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்தார்.

முதல் பரிசு அடையாறு காந்தி நகரைச் சார்ந்த திருமதி இலட்சுமிக்குக் கிடைத்தது. இவருக்கு 3.750 கிராம் எடையுள்ள இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

மூன்று இரண்டாவது பரிசுகள் - முறையே பல்லாவரத்தைச் சேர்ந்த திருமதி சாந்தி, வில்லிவாக்கத்தைச் சார்ந்த திருமதி பொன்மலர், கொடுங்கையூரைச் சேர்ந்த திருமதி ஜூலியட் ஆகியோருக்குக் கிடைத்தன.

இவர்களுக்குத் தலா 3.750 கிராம் உள்ள ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். குலுக்கல் விழாவில் இந்திய மக்கள் தொகைத் திட்டம் ஐந்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹைமா பாலச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார்.

---

**பெரியார் சரணாலயம்**

மதுரையிலிருந்து கோட்டயம் செல்லும் பாதையில் 140 கி.மீட்டர் தொலைவில் குமுளி அருகில் உள்ளது இந்தச் சரணாலயம். பெரியாற்றின் குறுக்கே அணை எழுப்பியதால் உண்டான செயற்கை ஏரி இங்குள்ள அனேகக் குன்றுகளைச் சூழ்ந்து கொண்டுள்ளது. இக்குன்றுகளில் யானை, காட்டெருமை, புலி ஆகியவற்றைக் காணலாம். மேலும், காட்டுப் பன்றி, நீலகிரிக் குரங்கு, கடமான், காட்டு நாய், புலி ஆகியவற்றையும் பார்க்கலாம். படகில் பயணம் செய்துதான் இந்தச் சரணாலயத்தைப் பார்க்க முடியும். அதிக அளவில் கழுகுகளையும், பலவிதப் பறவைகளையும் இங்கே காணலாம். ஏரியில், ஆமைகள், நீர் நாய்கள், நீர்ப் பறவைகளும் உள்ளன.



மதுரை - கோட்டயத்திலிருந்து பேருந்து வசதி உண்டு. இங்கும், அருகில் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ள குமுளி என்ற ஊரிலும் தங்க வசதிகள் உண்டு.

**மற்ற விபரங்களுக்கு:**

The Field Director,
Periyar Tiger Reserve,
Thekkady (Near Kumili)
Kerala

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**ஆந்திர மாநிலம்**

**நெல்லப்பட்டுப் பறவை சரணாலயம்**

சென்னைக்கு வடக்கே 100 கி.மீட்டர் தொலைவில் துரைவாரி சத்திரம் என்றும் ஊருக்கு அடுத்தாற்போல் இந்தப் பறவை சரணாலயம் உள்ளது. பெலிகன் பறவைகள், இங்கே ஒரு பாசன ஏரியில் கூடு கட்டிக் குஞ்சு பொரித்து வருகின்றன.

நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை இங்கு இப் பறவைகளைக் காணலாம்.

('மதராஸ் நாச்சுரலிஸ்ட் சொசைட்டி'யின் 'நமது சுற்றுப்புறம் -ஒரு கண்ணோட்டம்' தொகுப்பு ஆசிரியர்கள் வி.ஜே. ராஜன் - எம். செல்வகுமார்.)

கோவை மாவட்டம்:

# சமுதாய நலப்பணிகள்

**1992-93**-ஆம் நிதியாண்டில் சுமார் 2,239 வேலைகள் ரூ.606.238 இலட்சத்தில் நிறைவேற்றத் திட்டமிட்டு செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரம் மற்றும் நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முதல் தவணையாக ரூ.199.310 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைப் பயன்படுத்தி, சென்ற ஆண்டு நிலுவை வேலைகளும், நடப்பு ஆண்டில் கூட்டுக் குடியிருப்புகள், பத்து இலட்சம் கிணறுகள் திட்டமும் செயல் படுத்தப்படவுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக ரூ.26.670 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து 5 பாசனக் குளங்கள் மேம்படுத்தும் பணியும், 15 புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், 18 கி.மீ. மெட்டல் சாலை அமைக்கும் பணிகளும் துரித கதியில் நடந்துவருகின்றன. இதுவரை சுமார் 10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 15.8.92-க்குள் முடிக்கப்படும்.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் நிதியாண்டில் ரூ.843.30 இலட்சம் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் எடுக்கப்பட்டு, இதுவரை 658 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1992-93-ஆம் நிதியாண்டில் ரூ.1,122 இலட்சம் மதிப்புள்ள வேலைகளை எடுத்துச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் அங்கீகாரமும் நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் குறித்து புதிதாகக் கோவை மாவட்டத்தில் கணக்கெடுத்து முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 4,74,074 குடும்பங்களில் 1,83,871 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மொத்தக் குடும்பங்களில் 39 சதவிகிதமாகும். கணக்கெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து 1992-93- ஆம் நிதியாண்டில் உதவி



செய்யவேண்டிய குடும்பங்களைத் தேர்வு செய்ய ஊராட்சி அளவிலான குழுக்கள் (Task Force) கூட்டம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கென மத்திய அரசு மானியமாக முதல் தவணையாக ரூ.30.431 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1992-93-ஆம் நிதியாண்டில் 11,000 குடும்பங்களுக்கு ரூ.324 இலட்சம் மானிய உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (டிரைசம்)

இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் நிதியாண்டில் 1,348 நபர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டு அரசு ஒதுக்கீடும் · கிடைத்துள்ளது. பயிற்சியளிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**சாண எரிவாயுக் கலன்கள் அமைத்தல்**

1991-92-ஆம் நிதியாண்டில் 1,020 கலன்கள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், குறியீட்டினை மிஞ்சி 1,247 கலன்கள் அமைக்கப் பட்டு, கோவை மாவட்டம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.

நடப்பு நிதியாண்டில் 1,200 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 57 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் 150 கலன்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**தூளா (புகையில்லா அடுப்புகள் அமைத்தல்)**

இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 6000-க்கு மேல் 8800 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 6000 அடுப்புகள் கிராமப் புறப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் (டோக்ரா)**

இத்திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே 49 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, மகளிர் பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு வகையான உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி யாண்டில் மேலும் 59 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கிடத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், இது வரை 328 பெண்களுக்கு ரூ.7.470 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சமூகக் காடுகள் திட்டம்**

சமூகக் காடுகள் திட்டம் கோவை மாவட்டத்தில் 1992-93-இல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ரூ.28.380 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. 13,50,000 செடிகள் வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 'சிடா' நிறுவனத்தின் உதவியுடன் இந்த நிதியாண்டில் 21 கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், 21 சமூகக்காடு விரிவு அலு வலர்கள், 105 ஊர்நல அலுவலர்கள், 1000 தொகுப்பு வீடுகள் பயனாளிகள் மற்றும் 20 காவலர்களுக்கு 22.7.92 முதல் ரூ.51,625 செலவில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**1991-92-இல் திட்டப்பணிகள் சாதனை விவரம்**

**1. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

| வ. எண். | பணியின் விவரம் | சாதனை | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | தொகுப்பு வீடுகள் | 1980 | 306.250 |
| 2. | பள்ளிக் கட்டடங்கள் | 78 | 107.640 |
| 3. | ஊராட்சிக் கட்டடங்கள் | 19 | 13.300 |
| 4. | சத்துணவு மையங்கள் | 72 | 50.400 |
| 5. | பாசனக் குட்டைகள் | 112 | 109.300 |
| 6. | பாசனக் குளங்கள் மேம்படுத்துதல் | 14 | 14.850 |
| 7. | சாலைகள் | 181.02 கி.மீ | 296.680 |
| 8. | ஊராட்சி வேலைகள் | 1452 | 13.084 |
| 9. | சிறு பாலங்கள் | 3 | 6.820 |
| 10. | சமூகக் காடுகள் | 15.000 (450 எக்டேர்) | 28.380 |

| | | | |
|---|---|---|---|
| 2. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை | 9942 | மானியம் ரூ.258.246 இலட்சம் |
| 3. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி பெற்றவர்கள் | 1470 | ரூ.21.060 இலட்சம் |
| 4. | சாண எரிவாயுக்கலன் அமைத்தல் | 1247 | இஃது மாநிலத்தில் முதலிடம் |
| 5. | தூளாக்கள் அமைத்தல் எண்ணிக்கை | 8800 | ரூ.5.456 இலட்சம். |

## சென்னை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு...

"சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத் தனியார் பள்ளிகளைவிட அதிகமாகச் சம்பளம் - அரசாங்க விகிதத்தில் வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் இருக்கும் வேலைப் பளுவும் இவர்களுக்கு இல்லை. ஆகை யால், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் முழு மூச்சுடன் பணியாற்றி, தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடு பட வேண்டும்.

"மாநகராட்சிப் பள்ளிகளில் சுமார் 2.50 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களுள் கூர்மையான அறிவுடைய மாணவர் களைப் பல சோதனைகள் நடத்தித் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சிகள் அளிக்க வழிவகை செய்யப்படும். மாநகராட்சி மருத் துவர்கள் மூலம் மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்படும்."

[சைதாப்பேட்டை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று முதல் மூன்று இடங்களைப் பெற்ற 6 முதல் 12-ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர் களுக்கும், உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் அளித்து, சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் கூறியது.]

## செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்

# ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும், பொதுமக்களை மாவட்ட வாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

20.7.92 அன்று, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலிருந்து வந்திருந்த 8000-க்கும் மேற்பட்ட பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அவர்களின் குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவைச் சிகிச்சைக்காக 17 பேர்களுக்கு ரூ.2,39,250, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக இருவருக்கு ரூ.40,000 மற்றும் முதியோர் ஓய்வுத் தொகை 71 நபர்களுக்கும் ஆக மொத்தம் 90 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பர்கூர் தொகுதியிலுள்ள 69 சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்க்க, சத்துணவுக் கூடங்கள் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.9,60,000-க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினார்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் தாம்பரம், கடப்பேரியைச் சேர்ந்த ராமசாமி என்பவரின் மகன் முருகன் என்ற பையன், தான் ஊனமுற்றவன் என்றும், தன்னால் நடக்க இயலாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தன்னை ஊனமுற்றோர் விடுதியில் தங்க வைத்துக் படிக்க உதவி செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 20.7.1992 அன்று தலைமைச் செயலகத்தில் மனுகொடுத்தார்.

அவருடைய மனுவில் வேண்டியுள்ள கோரிக்கையை உடனே செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள கூடுவாஞ்சேரியில் உள்ள அரசு மானியத்துடன் பிரபாவதி டிரஸ்டினால் நடத்தப்படும் ஊனமுற்றோருக்கான பள்ளியில், மனு கொடுத்த நாளான 20.7.1992 திங்கட்கிழமையன்றே சேர்க்கப்பட்டு திரு. முருகன் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சாம்பசிவம் என்ற வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் தன்னை முதியோருக்கான இல்லத்தில் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனு கொடுத்தார். அம்மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை உடனடியாகச் செயல்படுத்துமாறு உத்தரவிட்டதின் பேரில், திரு. சாம்பசிவம், சென்னை ஆந்திர மகிள சபா நடத்தும், முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.



# படமும் செய்தியும்

திருப்பதி செல்லும் வழியில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்திறங்கிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, அவரது துணைவியார் திருமதி விமலா சர்மா ஆகியோரை, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் மாலை அணிவித்து அன்புடன் வரவேற்றனர் (27.7.92).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 27.7.92 அன்று, தலைமைச் செயலகத்தில் மின்னணுத் தொலைபேசி இணைப்பகத்தைத் தொடங்கி வைத்தார்.





மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் இரத்தக்கசிவினால் பாதிக்கப் பட்ட செல்வி வசந்தாவுக்கு மருத்துவச் செலவிற்காக ரூ. ஒரு இலட்சத்திற்கான வைப்பு நிதிப் பத்திரத்தைவழங்கினார் (20.7.92).

அமெரிக்காவில் சிகிச்சை பெற்று, தாயகம் திரும்பிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை, விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர் (20.7.92).



போர்க்கால அடிப்படையில்:

# கோவை, நீலகிரி மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள்

**மி**கப் பெரிய மலை!

சுரங்கப்பாதை கூடத் தெரிகிறது... துணிந்து உள்ளே செல்கிறோம்.

அங்கே நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்!

மேலே மேலே செல்கிறோம்.

இப்போது, 600 மீட்டர் வரை, போகலாம் என்கிறார் ஒருவர்.

அப்படியானால், இது எங்கே போகிறது? எதற்காக இந்தச் சுரங்கம்?

அது ஒரு கதை... உண்மைக் கதை!

## பில்லூர் குடிநீர்த் திட்டம்

கோவை நகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது செல்வபுரம். இங்கு உள்ளதுதான் கட்டன் மலை. இந்த மலையில்தான் சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

'நீரின்றி அமையாது' உலகு என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு மிக முக்கியமான திட்டம்தான், கோவை மாவட்டப் பில்லூர் குடிநீர்த் திட்டம்.

கோவை நகரிலிருந்து 70 கி.மீ. தூரத்தில் உள்ளது பில்லூர் அணை. பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை. இந்த நீரைக்கோவை மாவட்டத்திற்கு வழங்க, போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடந்து வருகின்றன.

பொதுவாக, சுரங்கப்பாதை விவசாயத்திற்கும், ரயில்பாதை அமைப்பதற்கும், மின் திட்டத்திற்கும்தான் அமைப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், குடிநீருக்காக மலையைக் குடைந்து சுரங்கப் பாதை அமைக்கப்படுவது, இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும். அதுவும் 4½ கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்படுவது என்பது, விந்தைக்குரிய செய்தியாகும்.

**கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

**இதேபோல நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் கூடலூர் குடிநீர்த் திட்டமும் துரிதகதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

உலக வங்கி உதவியுடன் ரூ.100 கோடி செலவில், இப்போது இந்தப் பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக, இந்தச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருவதும், இதில் சுமார் 500 பேர் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

### குடிநீர்ப் பஞ்சம் நீங்கிட...

கோவை குடிநீர் வழங்கும் திட்டம், உலக வங்கி உதவியுடன், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர்ச் சுரங்கங்கள், குடிநீர் வடிகால் வாரியத்திற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கட்டுமானம் செய்து தரப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கோவை, மதுக்கரை, செட்டிப்பாளையம், எட்டிமடை, ஒத்தக்கால் மண்டபம், திருமலையாம்பாளையம், வெள்ளலூர், பெரிய நாயக்கம்பாளையம், கூடலூர், துடியலூர் உட்பட பல பகுதிகளுக்குக் குடிநீர் கிடைக்கும் அதாவது, இத்திட்டம், கோவை மாவட்டத்தில் உள்ள 476 கிராமப் புறக் குடியிருப்புகள், 20 நகர்ப்புற ஊராட்சிகளுக்குக் குடிநீர் அளவினைக் கூடுதல் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் பல்லாண்டுக் காலமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. அதற்கு விடிவுகாலம் பிறந்து விட்டது. இந்த அரிய திட்டத்தின் மூலம் குடிநீர்ப் பஞ்சம் நீங்கி, மக்கள் குதூகலிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

கோவை குடிநீர்த் திட்டம், சிறுவாணியை ஆதாரமாகக் கொண்டு, 95,100 மக்கட்தொகைக்கு, நாளொன்றுக்கு 11.35 மில்லியன் லிட்டர் வீதம் 1927-இல் பணி தொடங்கப்பட்டது. இது 1931-இல் முடிக்கப்பட்டது. அதிகத் தேவையைப் பூர்த்தி செய்ய நாள் ஒன்றுக்கு 34.1 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க 1974-இல் வார்ப்பு இரும்புக் குழாய்கள் பதிப்பிக்கப்பட்டன.

வளரும் கோவை நகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, நாளொன்றுக்கு 101.4 மில்லியன்

விட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு, 12.47 இலட்சம் மக்கட்தொகை யின் தேவையைப் பூர்த்தி செய்ய 1982-இல் கோவைக் குடிநீர் மேம் பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

தற்போது பயனில் உள்ள இச் சிறுவாணி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கோவை உள்ளூர்ப் பகுதி களுக்கு இடைக்காலத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. எனவே தான், மேற்கண்ட புதிய திட்டம் உரு வாகி, இப்போது துரிதகதியில் இயங்கி வருகிறது.

**பில்லூர் அணையில்!.**

கோம்பை மலை!

இங்கே 40 மீட்டர் ஆழமுள்ள ராட்சதக் கிணறு தோண்டப்பட்டு உள்ளது.

மின்சார இழுவை மூலம், கிணற் றுக்குள்ளே கொண்டு செல்லப் படுகிறோம்!

இருபுறமும் சுரங்கப்பாதை குடையப்படுவதை அங்கே பார்த்து வியக்கிறோம்.

இது 3,850 மீட்டர் நீளத்திற்குக் குடையப்பட்டு, பிறகு வெள்ளியங் காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத் துடன் குழாய்ப் பாதைகள் மூலம் இணைக்கப்படும்.

கோம்பை மலையிலிருந்து, சுரங் கப்பாதை அமைக்கப்பட்டு 4½ கி.மீ. தூரமுள்ள கட்டன் மலைவரை பில்லூர் அணைப்பகுதியில், தண் ணீரைச் சுரங்கத்தின் வழியாகக் கொண்டு வரும் வேலை இப்போது மிகச் சுறுசுறுப்பாக, துரிதமாக நடை பெற்று வருகிறது.

1991-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இந்தப் பணிகள் தொடங்கின. 1993-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத் திற்குள் இந்தப் பணிகள் முடிவடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் கோவை நகர்க் குடிநீர்ப் பஞ்சம் தீரும்.

பில்லூர் அணை!

கடல் போன்று பரந்த நீர்ப் பரப்புள்ள பவானி ஆற்றின் பவனி கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

பில்லூர் அணையின் நீளம் 356.620 மீ. கொள்ளளவு 44.37 மில்லியன் கன மீட்டர் (1568 மில்லியன் கன அடி), நீர்ப்பிடிப்புப் பரப்பு 1503 சதுர கி.மீ. (460 சதுர மைல்).

இந்த அணையின் நீரோட்டப் பகுதியில் ராட்சத நீர் ஊற்றுக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. அதையொட்டிச் சிறுபாலம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கிணற்றிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீரை விசை நீரேற்றிகள் மூலம் அருகே அமைக்கப்பட்டு வரும் சுரங்கத்திற்குச் செலுத்தப்படும். அதாவது, நெல்லிமரத்தூரில் இந்தச் சுரங்கப்பாதை உள்ளது. இதுவே, மேற்கண்ட குடிநீர்த் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுவரும் சுரங்கப் பாதையின் தொடக்கமாகும்!

இப்படி நாலாபக்கமும், சுரங் கப்பாதை அமைக்கும் பணி, தண் ணீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டு தல், இரும்புக் குழாய்கள் பதித்தல் முதலான பணிகளும் திட்டமிட்டு, ஒரே சமயத்தில், ஒழுங்காக, துரித மாக நடைபெற்று வருவதை இங்கே நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

**சுத்திகரிப்பு நிலையங்கள்**

**வெள்ளியங்காடு!**

இங்குதான், தண்ணீரைச் சுத்தி கரிப்பதற்கான நிலையங்கள் வேக மாகக் கட்டப்பட்டு வருகின்றன.


முதலில் தண்ணீரிலுள்ள வண் டல் மண் தெளிய வைக்கப்பட்டும். பிறகு, தண்ணீரில் மருந்து கலந்து தெளிய வைக்கப்படும்.

அதன்பிறகு, தண்ணீர் நன்கு தெளிய வைக்கப்படும்.

மூன்று கட்டங்களில் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு, பிறகு விநி யோகிக்கப்படும்.

ஒருபுறம் பெரிய பெரிய இரும் புக் குழாய்கள் இருப்பதைப் பார்க் கிறோம்.

அந்தக் குழாய்களுக்கு உள்ளும் புறமும் சிமெண்ட் கலவை கருவி





**கோவை மாவட்டம், நெல்லிமரத்தூரில், அமைந்துள்ள சுரங்கப் பாதையின் ஆரம்பம்.**

மூலம் தெளிக்கப்படுகிறது. இதனால், இரும்பு துருப்பிடிக்கா வண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

அடுத்த கட்டத்தில், இந்தக் குழாய்கள் பூமியில் இறக்கப்பட்டு, இணைக்கப்படுகின்றன. அதாவது, குழாய்களை இணைத்துப் பற்ற வைக்கப்படுகிறது.

பிறகு இந்தக் குழாய்கள் கட்டன் மலையில் உள்ள குகைக்கு உந்தப்படும். தூய நீர் குகையிலிருந்து 1500 மி.மீ. விட்டமுள்ள சிமெண்ட் குழாய்கள் மற்றும் வெவ்வேறு விட்டமுள்ள கல்நார்க் குழாய்களில் புவிஈர்ப்புச் சக்தியின் மூலமாக, கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சிகள் மற்றும் 523 கிராமக் குடியிருப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். கோவை மாநகராட்சிக்குத் தேவையான நீர், முக்கியக் குழாயிலிருந்து சக்திச்சாலையைக் கடக்குமிடத்தில் துணை முக்கியக் குழாய் மூலம் சிவானந்தபுரத்தில் கட்டப்படும் முக்கிய மேல் நிலைத் தொட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிறகு பகிர்ந்தளிக்கப்படும்.

**உலக வங்கி பாராட்டு!**

'தமிழ்நாட்டில் உலக வங்கி உதவி மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள், செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை உலக வங்கி பாராட்டி இருக்கிறது' என்று உலக வங்கித் திட்டத் தலைமைப் பொறியாளர் திரு. வி.ஆர். வைத்தியநாதன் அவர்கள், செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்

அவர்மேலும் கூறுகையில்-

தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் உலக வங்கி நிதி உதவியின் 2-வது தவணையின் மூலம் கோவை, சேலம் மாவட்டங்களுக்குக் குடிநீர்த் திட்டப் பணிகளை மேம்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் கோவை மாவட்டத்தில் 500 கிராமங்களும், சேலம் மாவட்டத்தில் 260 கிராமங்களும் குடிநீர் வசதி பெறும்.

இந்தப் புதிய குடிநீர்த் திட்டப் பணிகள் உலக வங்கியின் மூலம் ரூ.322 கோடி செலவில் நிறைவேற்றப்படும். உலக வங்கி குடிநீர்த் தட்டுப்பாடுள்ள இடங்களுக்குக் குடிநீர் வழங்க 2-வது தவணையாக இந்தத் தொகையைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் பொள்ளாச்சி, திருவண்ணார் மலை, காஞ்சிபுரம், சங்கரன்கோயில், புதுக்கோட்டை, மணப்பாறை ஆகிய நகரங்களுக்கும் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1985-இல் உலக வங்கியிடமிருந்து முதல் தவணையாகப் பெற்ற ரூ.142 கோடி நிதியிலிருந்து மாநிலத்தில் 44 நகரங்களுக்குக் குடிநீர் வசதியை விரிவாக்கியதுடன் கோவை, மதுரை, சேலம் நகரங்களின் குடிநீர்த் திட்டப்பணிகள் மேம்படுத்தப்பட்டன. இந்த நிதியிலிருந்து ஒரு சிறு தொகை குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து உலக வங்கயிடமிருந்து பெற்ற நிதியுதவியில் கணிசமான தொகையைச் சேமிக்க முடிந்தது.

தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டப் பணிகளைப் பார்வையிட்டு திருப்தி வெளியிட்ட பிறகு, உலக வங்கி கூடுதலாக நிதியுதவியைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது.

நிர்வாக வழிமுறைகளை எளிதாக்கியதன் மூலம் 6.50 கோடி மதிப்பீட்டிலான ஒப்பந்தப் புள்ளி

# ரூ.100 கோடி செலவில் சுரங்கம் மூலம் கோவைக்குக் குடிநீர்! 20 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்!

களை 6 மாதங்களுக்குள்ளாகவே முடிவு செய்ய முடிந்தது.

கணிப்பொறிகளை (Computer) பயன்படுத்தியதன் மூலம் கணிசமான நேரமும் பணமும் மிச்சப்படுத்தியதுடன், பணியின் முன்னேற்றங்களையும் உடனுக்குடன் கண்காணிக்க முடிந்தது.

கோவை, மதுரை, சேலம் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் குழாய்களில் சேதம் ஏற்பட்டு தண்ணீர்க் கசிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒரு புதிய திட்டத்தை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வாரியம் திட்டமிட்டிருக்கிறது. 'வாப்கோஸ்' (WAPCOS) என்ற மைய அரசு நிறுவனத்துடன் இணைந்து இந்த நீர்க் கசிவு கண்டு பிடிக்கும் பணி செயல்படுத்தப் படும். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 30 முதல் 40 சதவிகிதம் வரை குழாய்க் கசிவு காரணமாக வீணாகும் தண்ணீர் சேமிக்கப் பட்டுப் பொதுமக்களுக்கு வழங்கப் படும்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, மாநகராட்சி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அங்கு வாழும் மக்களின் சமுக, பொருளாதார நிலையின் அடிப்படையில் தண்ணீர் வரி வசூல் செய்யப்படும். இந்தப் புதிய வரி வசூல் திட்டத்தின் மூலம் குறைந்த வருவாய் உடைய மக்களிடம் குறைவான வரி வசூல் செய்வதுடன், மாநகராட்சிக்குக் குடி நீர் வரி மூலம் நிறைவு நிதி கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

**கோவை மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்; கட்டன் மலையில் சுரங்கப் பாதை.**

## நீலகிரி மாவட்டத்தில்...

இயற்கையன்னை களிநடம் புரியும் ஊட்டி!

விண்ணைத் தொடும் நெடிய மரங்கள். கண்ணைக் கவரும் பன்னிற மலர்கள். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலன பசுமைக் கூட்டங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக குளுமை தவழும் சூழ்நிலை.


இங்கிருந்து, பார்சன் பள்ளத் தாக்கு நீர்த்தேக்கத்துக்குச் செல்கிறோம்.


ரூ.7½ கோடிச் செலவில், ஊட்டிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுவதை நேரில் பார்க்கிறோம்.

இப்போது இதன் விரிவாக்கப் பணி நடக்கிறது. தற்போது 10 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப் படுகிறது. பிறகு, 30 இலட்சம் காலன் தண்ணீர் விடப்படும். இத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பட்டபின், ஊட்டிக்குத் தண்ணீர்ப் பஞ்சமே இருக்காது. இங்கும், தற்போது ஒரு தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் துரிதமாகக் கட்டப்பட்டு வருகிறது.

**கூடலூரில்...**

ஊட்டியிலிருந்து நேரே கூடலூருக்குச் செல்கிறோம்.





பவானி ஆற்றின் குறுக்கில் கட்டப்பட்டுள்ள பில்லூர் அணை.

இங்கே, கூடலூர் குடிநீர் துணைத் திட்டம் செயல்படுவதை நேரில் பார்க்கிறோம்.

கூடலூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில், ஹெலன் நீரோடையின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.


அந்த இடத்திற்குப்போக வேண்டும்.. காடு முரடான பாதை... அதுவும் ஒற்றையடிப் பாதை... ஜீப்பில் போய்ச் சேருவதற்குள் போகும் போதும் என்றாகி விடுகிறது.

ஒரு அரை நாள், அங்கு நாம் போய் வரச் சலித்துக் கொள்கிறோம்.

ஆனால், மக்களுக்குக் குடிநீர் தடை இல்லாமல் வழங்க வேண்டும் என்னும் நோக்கில், முதலில் அந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதற்கான ஆக்கப் பணிகளைச் செய்து வரும் அரசையும், அரசு ஊழியர்களையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

உலகில் அதிகமாக மழை பெய்யும் சிரபுஞ்சிக்கு அடுத்தபடியாக,

இரும்புக் குழாய்கள் துருப்பிடிக்கா வண்ணம் அதன் மீது, சிமெண்ட் கலவை தெளிக்கப்படுகிறது.





வெள்ளியங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையம்.

கூடலூரைச் சொல்லுகிறார்கள். ஆம். இங்கு மார்ச், ஏப்ரல் தவிர ஆண்டு முழுவதும் மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்த வளமான பூமியில் காபி, தேயிலை, மற்றும் ஏலம், கிராம்பு, மிளகு முதலான வாசனைத் திரவியங்கள் விளைகின்றன.

**கூடலூருக்குக் குடிநீர்**

கூடலூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு பேரூராட்சியாகும். 1981-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, பேரூராட்சியின் மக்கட்தொகை 21,983 ஆகும். தற்போது பேரூராட்சியின் அருகில் ஓடும் நான்கு ஓடைகளை நீர்மூலமாகக் கொண்டு, நீரேற்றிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வழங்கப்பட்டு வரும் தண்ணீர் மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது. மேலும் கோடை காலங்களில் நீரோடைகள் வறண்டு விடுகின்றன. எனவே, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் தமிழ்நாடு அரசு ரூ.281.15 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் மேற்கண்ட இத்துணைத் திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான தண்ணீர் பாண்டியாறு ஆற்றின் குறுக்கே 26 மீ நீளமும், 2 மீ. உயரமும் கொண்ட ஒரு சிற்றணை கட்டி, அதிலிருந்து நீர் எடுக்கப்பட உள்து. நாளொன்றிற்கு 2.87 மில்லியன் லிட்டர் இயல்பு நீர், 2.60 கி.மீ. நீளத்திற்கு வெவ்வேறு அளவுகளுள்ள வார்ப்பிரும்புக் குழாய்களின் மூலம் புவி ஈர்ப்புச் சக்தியினால் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீர் புவிஈர்ப்புச் சக்தியால் 17.34 கி.மீ. நீளத்திற்குப் பல்வேறு அளவுகளுள்ள இரும்பு, வார்ப்பு மற்றும் கலாய்க் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்குத் தேவையான நீர், முக்கியக் குழாய்களிலிருந்து வெவ்வேறு இடங்களில் 6 துணை முக்கியக் குழாய்கள் மூலமாக நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்பு பகிர்மானக் குழாய்கள் மூலமாக, கூடலூர் மற்றும் அதன் 18 உட்கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவியுடன் செலவாகும் தொகையை, கூடலூர் பேரூராட்சி 25 சதவிகிதம் கடனாகவும், 75 சதவிகிதம் மானியமாகவும் ஏற்கிறது.

இப்போது இந்தத் திட்டம் முடிவுறும் தறுவாயில் உள்ளது.

**குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை**

இவ்வாறு, பட்டி தொட்டிகளிலும் குடிநீர் கிடைத்திட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கோடை காலத்திலும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படா வண்ணம், அரசு பல நீர் ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்து ஆயத்தப் பணிகள் அனைத்தையும் ஒழுங்காகவும், அதே சமயத்தில் துரிதமாகவும் செய்து வருகிறது.

எதிர்காலத்தில் குடிநீர்ப் பஞ்சமே இல்லாத சூழ்நிலை உருவாகிட, எல்லா வகையிலும் அரசு அரும்பணியாற்றி வருகிறது என்றால், அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

**-பி.வி. கிரி.**



ஹெலன் நீரோடையின் குறுக்கே உள்ள தடுப்பணை.



# சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

**சேலம்** மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக் கணக்கான பொதுமக்களிடமிருந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.5.92 அன்று மனுக்களைப் பெற்று அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்தார். அன்று மனு கொடுத்த ஆயிரக்கணக்கான பேர் களில் தகுதியானவர்கள் 520 நபர்களைத் தேர்ந் தெடுத்து, 27.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சேலத்திலிருந்து அரசு செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாக, தையல் இயந்திரம் 40 பேர் களுக்கும், சலவைப்பெட்டி 10 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவி 51 பெண்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதி உதவி 7 நபர்களுக்கும், கலப்புத் திருமண நிதி உதவி 15 நபர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 3 பேர் களுக்கும், கடும் உடல் ஊனமுற்றோர் பராமரிப்புத் தொகை ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 168 நபர்களுக்கு ரூ.11.41 இலட்சம் மானி யத்துடன் இணைந்த கடனும், லாரி வாங்க 3 பேர்களுக்கு ரூ.13.24 இலட்சம் மானியத்துடன் இணைந்த கடனும், உடல் ஊனமுற்றோர் 15 பேர்களுக்கு வங்கி மூலம் நிதி உதவியும், உழவு மாடுகள் வாங்க 5 பேர்களுக்கும், ஆட்டோ ரிக்ஷா வாங்க ஒருவருக்கும், காலணி தயாரிக்க ஒருவருக்கும், ஆயில் மில் நிறுவனக் கடன் ஒரு வருக்கும், பாய்த்தொழில் செய்ய ஒருவருக்கும், புத் தகப் பைண்டிங் தொழில் செய்ய ஒருவருக்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், வீட்டுமனைப் பட்டா 30 பேர்களுக் கும், நிலப்பட்டா 5 பேர்களுக்கும், முன்னாள் இராணுவத்தினர் மகள் திருமண நிதி உதவி 2 நபர்களுக்கும், நலிந்தோர் நல நிதி உதவி 10 நபர்களுக்கும், பட்டு வளர்ச்சிக் கடனுதவி 10 நபர்களுக்கும், கதர் கிராமத் தொழில் நிதி உதவி 20 பேர்களுக்கும், இருதயச் சிகிச்சைக்காக முதல்வர் நிவாரண நிதி உதவி ஒருவருக்கும், விதவைகள் உதவித்தொகை 5 நபர்களுக்கும், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், உடல் ஊன முற்றோர் 20 பேர்களுக்குச் சக்கர வண்டிகளும், காதொலிக் கருவிகள் 5 பேர்களுக்கும், முட நீக்கியல் சாதனம் (காலிபர்) 12 பேர்களுக்கும் சக்கர நாற்காலி ஒருவருக்கும், விதவைகளின் குழந்தைகள் 10 பேர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், ஏழை மாணவர்கள் 10 பேர்களுக் குப் பாடப் புத்தகங்களும், நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 50 பேர்களுக்குக் கடனு தவியும் வழங்கப்பட்டன.

மொத்தம் 520 நபர்களுக்கு ரூ.41.994 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அன்று நலத்திட்ட உதவிகள் பெற்ற 520 நபர்களில் 345 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 9 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6 ஆண் குழந்தைகளுக்கு இராமச்சந்திரன், ராஜராஜன், வெற்றிவேந்தன், சக்கரவர்த்தி, கார்த்திகேயன், நரசிம்மன் என்றும், 3 பெண் குழந்தைகளுக்கு இராஜலட்சுமி, விஜயலட்சுமி, மகாலட்சுமி என்றும் பெயர் சூட்டினார்.



ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா நடைபெறும் மான்ஜூயிக் ஸ்டேடியம்.

# ஒலிம்பிக் போட்டி

உலகில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியது, சிறப்பு வாய்ந்தது, ஒலிம்பிக் போட்டி ஆகும். இந்த ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமான 1896-ஆம் ஆண்டு முதல் இதுவரை 21 போட்டிகள், உலகின் பல்வேறு இடங்களில் நடந்தன. மூன்று ஒலிம்பிக் போட்டிகள் உலகப் போரின் காரணமாக கைவிடப்பட்டன. 25-வது ஒலிம்பிக் போட்டி தற்சமயம் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனாவில் நடைபெற்று வருகிறது.

**இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நடந்த ஆண்டும், இடமும்:**

முதலாவது ஒலிம்பிக் போட்டி : *1896* - கிரீஸ் நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரம்.

2-வது போட்டி : *1900* - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

3-வது போட்டி : *1904* - அமெரிக்காவிலுள்ள செயிண்ட் லூயிஸ்.

4-வது போட்டி : *1908* - இங்கிலாந்திலுள்ள இலண்டன் நகரம்.

5-வது போட்டி : *1912* - ஸ்வீடன் நாட்டிலுள்ள ஸ்டாக் ஹோம் நகரம்.

6-வது போட்டி : முதலாவது உலகப்போர் மூண்டதையொட்டி போட்டிகள் ரத்து செய்யப்பட்டன.

7-வது போட்டி : *1920* - பெல்ஜியம் நாட்டிலுள்ள ஆண்ட் வெர்ப் நகரம்.

8-வது போட்டி : *1924* - பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரீஸ் நகரம்.

9-வது போட்டி : *1928* - நெதர்லாந்து நாட்டிலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரம்.

10-வது போட்டி : *1932* - அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம்.

11-வது போட்டி : *1936* - ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரம்.

12-வது போட்டி, 13-வது போட்டி: 1940-இல் நடக்கவிருந்த 12-வது போட்டியும், 1944-இல் நடக்கவிருந்த 13-வது ஒலிம்பிக் போட்டியும் இரண்டாவது உலகப் போர் காரணமாக கைவிடப்பட்டன.

14-வது போட்டி : *1948* - இங்கிலாந்தி

லுள்ள இலண்டன் நகரம்.

15-வது போட்டி : 1952 - பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி நகரம்.

16-வது போட்டி : 1956 - ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள மெல்போர்ன் நகரம்.

17-வது போட்டி : 1960 - இத்தாலி நாட்டிலுள்ள ரோம் நகரம்.

18-வது போட்டி : 1964 - ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோ நகரம்.

19-வது போட்டி : 1968 - மெக்சிகோ நாட்டிலுள்ள மெக்சிகோ நகரம்.

20-வது போட்டி : 1972 - ஜெர்மனி நாட்டிலுள்ள மூனிச் நகரம்.

21-வது போட்டி : 1976 கனடா நாட்டிலுள்ள மாண்ட்ரீல் நகரம்.

22-வது போட்டி : 1980 ரஷ்யா நாட்டிலுள்ள மாஸ்கோ நகரம்.

23-வது போட்டி : 1984 - அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம்.

24-வது போட்டி : 1988 - தென் கொரியாவிலுள்ள சியோல் நகரம்.

25-வது ஒலிம்பிக் போட்டி ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சிலோனா நகரில் 25.7.1992 முதல் நடைபெற்று வருகிறது. 172 நாடுகளைச் சேர்ந்த பதினாறாயிரம் வீரர்கள், வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்கிறார்கள். ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் அதிக நாடுகள் பங்கு பெறுவதும், அதிக எண்ணிக்கையில் வீரர்கள், வீராங்கனைகள் பங்கு பெறுவதும் இந்த 25-வது ஒலிம்பிக் போட்டியில்தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

32 ஆண்டுகளுக்குப் பிறகு தென்னாப்பிரிக்கா இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெறுவது குறிப்பிடத்தக்கது.

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 25 விளையாட்டுப்போட்டிகள் இடம் பெறுகின்றன. இவற்றில் இந்தியா மொத்தம் 12 விளையாட்டுகளில் பங்கு பெறுகிறது. அவை யாவன: ஹாக்கி, ஜூடோ, வில்வித்தை, பளு தூக்குதல், மல்யுத்தம், பாய்மரப் படகுப்போட்டி, அத்லெட்டிக்ஸ், துப்பாக்கி சுடுதல், டேபிள் டென்னிஸ், டென்னிஸ், இறகு பந்து மற்றும் குத்துச்சண்டை.

## பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி - 1992

Barcelona '92



★ இதற்கு முன்னர் கடந்த ஒலிம்பிக் போட்டிகளுடன் ஒப்பிடும் போது, இப்போது நடைபெறும் பார்சிலோனா ஒலிம்பிக் போட்டி பல சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ளது.

★ மிக அதிக அளவில் 257 பதக்கங்கள் இந்த ஒலிம்பிக் போட்டியின்போது வழங்கப்படுகின்றன. இது 1988-இல் சியோலில் வழங்கப்பட்ட பதக்கங்களைக் காட்டிலும் 15 கூடுதலாகும்.

★ ஒலிம்பிக் போட்டி வரலாற்றிலேயே முதன் முறையாக இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் போட்டியில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் ஒலிம்பிக் குழுவின் விருந்தினர்களாக நடத்தப்படுகிறார்கள்.

★ இதுவரை நடைபெற்ற எந்த ஒலிம்பிக் போட்டியின்போதும் இல்லாத அளவுக்கு இந்த பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியின் போது, அதிக அளவில் தொலைக்காட்சி வருமானம் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1960-இல் ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை முதன் முதலாகத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பியபோது 21 ஐரோப்பிய நகரங்களிலிருந்து சுமார் 400 மில்லியன் மக்கள் போட்டியைக் கண்டுகளித்தனர். 1988-இல் நடைபெற்ற சியோல் ஒலிம்பிக் போட்டியை, 150 நாடுகளிலிருந்து சுமார் 3 மில்லியன் மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். 1992 ஒலிம்பிக் போட்டியை, 170 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3.5 மில்லியன் மக்கள் பார்க்கக் கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

★ புறக்கணிப்பு இன்றி அநேகமாக அனைத்து நாடுகளும் பங்குகொள்ளும் ஒரே ஒலிம்பிக் போட்டி 1992 போட்டிதான் என்பது குறிப்பிடத் தக்கது.

## அறிவுச் சுடர்

நம் நாட்டில் இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கும் மிகப் பழமையான செய்தித் தாள் எது?

'பாம்பே சமாச்சார்'

மிக அதிகத் தடவை ஆஸ்கர் விருது பெற்றவர் யார்?

வால்ட் டிஸ்னி. 35 முறை விருது பெற்றவர்.

உலகிலேயே தேயிலையை அதிக அளவு உற்பத்தி செய்வதும், பயன் படுத்துவதும், ஏற்றுமதி செய்வதும் எந்த நாடு?

இந்தியா.

பியானோவைக் கண்டுபிடித்த நாடு எது?

இத்தாலி.

வில்லியம் சேக்ஸ்பியர் எழுதிய கடைசி நாவல் எது?

'தி டெம்பஸ்ட்'.

கிரிக்கெட் மட்டைகள் எந்த மரத் திலிருந்து தயார் செய்யப்படுகின்றன?

வில்லோ மரத்திலிருந்து.

1968-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெற்றன?

மெக்ஸிகோவில்.

கிரிக்கெட்டில் பத்தாயிரம் ஓட்டங் களைக் குவித்து உலக சாதனை படைத் தவர் யார்?

சுனில் கவாஸ்கர்.

மிகப் பெரிய பறவை எது?

நெருப்புக் கோழி

பின்நோக்கிப் பறக்கும் திறன் கொண்ட ஒரே பறவை எது?

தேன்சிட்டு.

1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கட் தொகை எவ்வளவு?

84.39 கோடி

மதுரை செ. மதுக்குமார்

## மாணவர் பக்கம்

# கூட்டுறவால் கோடி இன்பம்!



ஏழுவண்ணம் இணைந்தகொடி ஒன்று ஒன்று
இணையில்லாத கூட்டுறவாம் நன்று நன்று
ஏழைவாழ்வில் ஏற்றும் ஒளி இன்று இன்று
ஈடில்லாத உயர்வுதரும் என்று என்று
பல்வழியும் கைகொடுக்கும் நின்று நின்று
பாமரரும் பயன்பெறலாம் சென்று சென்று
நிழல்கொடுக்கும் ஆலமரக் கன்று கன்று
நெருங்கி வந்தால் துயர் துடைக்கும் வென்று வென்று
தேன்கூடு ஒப்புமையாம் கண்டு கண்டு
தெவிட்டாத தேனமுதைக் கொண்டு கொண்டு
ஒருவர் நலம் பலர் உழைப்பில் உண்டு உண்டு
பலரும் வாழ ஒருவர் துணை தண்டு தண்டு
கொடுப்பதுவும் கொள்வதுவும் அண்ணே அண்ணே
கொள்கையிது என்றறிவீர் முன்னே முன்னே
கொண்டகடன் தீர்த்துவிட்டால் பின்னே பின்னே
கோடியின்பம் கொள்வதுதான் என்னே என்னே
வேற்றுமையில் ஒற்றுமையாம் கண்ணே கண்ணே!

- முத்துராசு.

## பொன்மொழிகள்

அறிவாளி தேர்வு செய்வது அடக்கத்தைத் தான். கனிகளைச் சுமந்திருக்கும் மரக்கிளை, பூமியை நோக்கித் தானே தன் தலையைத் தாழ்த்து கிறது.

- பேகன்

சந்தர்ப்பம் தானாக வரக்கூடியது அல்ல; மனிதன்தான் அதனைத் தானாக உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும்.

- பெர்னாட்ஷா

நேற்றைய நாளை எண்ணிக் கவலை வேண்டாம், இன்றைய நாள் தருவதை அனுபவி யுங்கள்; நாளைக்காகத் திட்டம் தீட்டுங்கள், அதுவே உங்கள் நாள்!

- லாங்ஃபெல்லோ

பத்து ஆசிரியர் ஒரு குருவுக்குச் சமம், நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம், ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்.

- மனுநீதி

# துணுக்குகள்

## வனத்துறை அலுவலர்களுக்கு முதல்வர் நிதி உதவி

தமிழகக் கேரள எல்லையில் குமிளிக்கு அருகாமையிலுள்ள அமராவதி குளம் என்ற இடத்தில் தமிழக வனத்துறையினரால் உருவாக்கப் பட்டிருந்த தேக்கு மற்றும் இலவ மரத் தோப்பு களை அழித்து, வனத்துறைக்குச் சொந்தமான, பாதுகாக்கப்பட்ட நிலம் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது.

1.7.1992 அன்று தமிழக வனத்துறையினர், இந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகச் சென்ற போது, வனத்துறை அலுவலர்கள் மீது 100 பேர் கொண்ட ஆக்கிரமிப்பாளர் கும்பல் ஒன்று நாட்டுத்துப்பாக்கியால் சுட்டது. இதில் வனக் காவலர் திரு. பாலகிருஷ்ணன், படுகாயமடைந்து மரணமடைந்தார். அந்தச் சம்பவத்தின்போது, மற்றொரு வனக் காப்பாளர் ஒருவர் படுகாய முற்று மதுரை பொது மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டிருக்கிறார். அதேபோல வன அலு வலர்கள் 5 பேர் இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்து உள்ளனர்.

மரணமடைந்த வனக்காவலர் திரு. பால கிருஷ்ணன் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதி யிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். அதேபோல, படுகாயம் அடைந்து மதுரை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வனக்காப்பாளருக்கு ரூ.50,000-மும், காயமடைந்த 5 வன அலுவலர் களுக்குத் தலா ரூ.5,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

## வாசனைத் திரவியம் ஏற்றுமதியில் சாதனை!

நமது நாட்டின் வாசனைத் திரவியம் ஏற்று மதியில் புதிய சாதனையாகச் சென்ற ஆண்டில் (1991-92-இல்) ரூ.364.02 கோடி மதிப்புள்ள 1,30,567 டன் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூபாய் மதிப்பில் 50 சதவிகிதமும், ஏற்றுமதி அளவில் 19 சதவிகிதமும் அதிகமாகும். சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.300 கோடி மதிப்புள்ள 1,15,000 டன் வாசனைத் திரவியங்கள் ஆகும்.

வாசனைத் திரவிய ஏற்றுமதியில் உலக அளவில் சென்ற ஆண்டு இந்தியாவின் பங்கு 33 சதவிகிதமாகும்.

நடப்பு ஆண்டில் (1992-93) ரூ.426 கோடி மதிப்புள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டன் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## கைத்தறி

• கடந்த நிதியாண்டில் ரூ.1,118.44 கோடி மதிப்புள்ள கைத்தறி ஜவுளித் துணிகள் இந்தியா விலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் ஏற்றுமதியான ரூ.841.13 கோடியை விட 41 சதவிகிதம் அதிகமாகும். அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளுமே பெரு மளவில் கைத்தறித் துணிகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. ஏற்றுமதியை ஊக்கு விக்கக் கைத்தறி வளர்ச்சி ஆணையகம் பல புதிய டிசைன்களை அறிமுகப்படுத்த முயற்சி எடுத்து வருகிறது.


## வறுமைக் கோடு

தனிநபர் மாதச் செலவு அடிப்படையில் வறுமைக்கோடு கணக்கிடப்படுகிறது. இது கிராமப் புறங்களில் 49 ரூபாய் 9 காசாகவும், நகர்ப் புறங்களில் 56 ரூபாய் 64 காசாகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 1981-88-ஆம் ஆண்டு கணக்குப் படி வறுமைக் கோட்டக்குக் கீழே 23 கோடியே 76 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். இது மொத்த மக்கள் தொகையில் சுமார் 30 சதவிகித மாகும். இதில் 19 கோடியே 59 இலட்சம் பேர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்.

நமது நாட்டில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் தான் அதிகபட்சமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கிறார்கள். இங்கு சுமார் 4 கோடியே 48 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வசிக் கிறார்கள்.

# வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் அரசு



**வேலைவாய்ப்பு** மற்றும் பயிற்சித் துறை ஒரு இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உட்பட) இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்புகளையும், வேலை தேடுவோரையும் இணைக்கும் பணியை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புரிந்து வருகின்றன. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு அரசு தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் பொறியியலைச் சார்ந்த பிரிவுகளும், பொறியியலைச் சாராத தொழில் பிரிவுகளும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்புப் பிரிவு**

கீழ்க்காணும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கெனச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.77.24 இலட்சம் தொகைக்கு அனுமதி வழங்கப் பட்டது.

கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர், தூத்துக்குடி, மதுரை. மேற்காணும் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் புதிய கட்டடம் ரூ.23.75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுத் திறப்பு விழா 15.5.92 அன்று கோவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கெனக் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன. ஏனைய வேலைவாய்ப்பு அலுவலகங்களின் கட்டுமானப் பணி 1992-93-ஆம் நிதியாண்டில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள், வேலைவாய்ப்பற்றோர்க்கான நிவாரணம் போன்ற பணிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சாதனைபடைத்து வருகிறது.**

உடல் ஊனமுற்றோரின் கல்வித் தகுதிக்கேற்ப அவர்களைப் பணியிலமர்த்தும் பணியினைக் கவனிப்பதற்காக, ஏற்கெனவே உள்ள 9 சிறப்புப் பிரிவுகளைத் தவிர, கீழ்க்காணும் 4 இடங்களில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள் அரசால் துவக்கப்பட்டன.

வேலூர், ஈரோடு, உதகமண்டலம், தூத்துக்குடி. விலை மதிப்பீட்டுக் கணக்கு மற்றும் மேலாண்மைத் துறையில் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ.-இல் 5 ஆதிதிராவிட இன மாணவர்களுக்கு இத் துறையின் மூலம் பயிற்சி அளிக்கப் பட்டது. ஐ.டி.ஐ. மற்றும் என்.எ.சி. சான்றிதழ் பெற்ற ஆதிதிராவிடர் இன வேலையற்ற மாணவர்களுக்குத் தொழிற் சாலைகளில் உரிய பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், மத்திய அரசு, வங்கிகள், இரயில்வே ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற ஆதிதிராவிடர்களில் இதுவரை 4,228 பேர்களுக்குத் தகுந்த முன்னோடிப் பயிற்சி அளித்து அவர்கள் அந்தந்த வேலைக்கான போட்டித் தேர்வுகளில் தேர்ச்சிபெற வகை செய்யப் பட்டது.

மைய அரசு உதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளைக் கம்ப்யூட்டர் மூலம் செய்யும் திட்டம் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் அடையாறு, அண்ணாநகர், கோயம்புத்தூர், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மாநில அரசு ரூ.13.65 இலட்சமும், மைய அரசு ரூ.3.68 இலட்சமும் வழங்கியுள்ளன. அடையாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அனைத்துப் பணிகளும் கம்ப்யூட்டர் மூலம் செய்யப்படுகிறது. அண்ணா நகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் அனைத்துப் பணிகளும் படிப்படியாகக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் துவங்கப்பட்டுள்ளது கோவை மற்றும் திருச்சி மாவட்ட

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், அவ்வலுவலகப் பணிகள் அனைத்தும் படிப்படியாகக் கம்ப்யூட்டர் மூலம் செய்யத் தொடங்கப்படும். மேலும் மதுரை, வேலூர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை, மதுரை, சென்னையிலுள்ள தொழிற் நுட்ப அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கம்ப்யூட்டர் மயமாக்க அரசு ரூ.4.96 இலட்சம் வழங்கியுள்ளது. தவிரவும், மைய அரசு ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சியில் 1992-இல் இத்துறை சம்பந்தப்பட்ட ஒரு அரங்கு அமைக்க அரசு ரூ.40,000-க்கு ஒப்புதல் வழங்கியது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சம்பந்தமாக மிக அழகான அரங்கு ஒன்று 1,000 சதுர அடியில் அமைக்கப்பட்டது. 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகக் கண்காட்சி 6.1.92 முதல் 9.4.92 வரை நடைபெற்றது. இத்துறையின் அரங்கில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை விவரிக்கும்படியான விளக்கப் படங்கள், சுவரொட்டிகள், புகைப் படங்கள், மற்ற கவர்ச்சியான தளவாடங்களும் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

16.6.91 முதல் 11.6.92 வரையிலான காலக் கட்டத்தில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்கள் (5 ஆண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருந்து உரிய வயது மற்றும் இதர தகுதிக்கு உட்பட்டவர்கள்) எனத் தெரிந்தெடுக்கப்பட்ட 1,33,338 நபர்களுக்கு (பட்டதாரிகள்-9,946, பி.யூ.சி./பிளஸ்-2 - 46,768 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. - 76,624) வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகையாக ரூ.9,19,60,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் இதர தகுதிக்குட்பட்ட 1,124 பார்வை அற்ற நபர்களுக்கு ரூ.12,72,950 வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-க்குரிய காலத்தில் தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்ட 29,661 மனுதாரர்களில் 10,655 பணியிடங்கள் பெண்களால் நிரப்பப்பட்டுள்ளன. இது 30 சதவிகிதத்திற்கும் மேற்பட்டதாகும். மேலும் இந்தக் காலத்தில் மொத்தம் 1,104 உடல் ஊனமுற்ற நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

**பயிற்சிப் பிரிவு**

தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த தென்காசி மற்றும் அம்பாசமுத்திரத்திலுள்ள கிராமிய அடிப்படைச் சேவை நிலையங்கள் (Rural Basic Service Centre) இத்துறைக்கு மாற்றப்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களாக உயர்த்தப்பட்டன.

அம்பத்தூரில் உணவகம் மற்றும் உணவு தயாரித்தல் (Hotel and Catering Trade) பிரிவுடன் அடிப்படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவையில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு 1991-92-ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சேலம் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விடுதி கட்டும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினருக்கு மதுரை மற்றும் கோவையில் பிளாஸ்டிக் புராசசிங் (Plastic Processing Trade) பிரிவு ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிண்டியில் பெண்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில் இரசாயனப் பிரிவிற்காக (Chemical Trades) அடிப்படைப் பயிற்சி மையம் (Basic Training Centre) ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரக்கோணம், தேனி, தாராபுரம், நாகர்கோவிலில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் ஆரம்பிக்கவும், இந்நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் கூடுதல் பணிமனை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு தொழிற் பிரிவுடன் கூடிய 72 இருக்கைகள் கொண்ட பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றினை மதுரையில் ஆரம்பிக்கவும், அதற்குப் புதிய கட்டடம் கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புத் திட்டத்தின் கீழ் (Evening Class Scheme for Industrial Workers) இந்த ஓராண்டில் 1,925 தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

டிரைசம் (Training of Rural Youth for Self Employment) திட்டத்தின் கீழ் 374 கிராமப்புற இளைஞர்கள் தொழில் நுணுக்கத்தையும், தாமே சுயமாக வேலைவாய்ப்பினைப் பெறக் கூடிய திறமையினையும் பெற்றுள்ளனர்.

'தாட்கோ' (TAHDCO) திட்டம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வோராண்டில் 101 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (Nehru Rozgar Yojana Scheme) 488 நகர்ப்புற வேலைவாய்ப்பற்ற ஏழை இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ●

**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை: இந்தியாவின் 9-வது குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்ற டாக்டர். சங்கர் தயாள் சர்மா அவர்கள் (25.7.92)**

**நான்காம் அட்டை: தென்னிந்தியத் திரைப் பட வர்த்தக சபை அளித்த மாபெரும் பாராட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (25.7.92)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


தென்னிந்திய